


# மருண்ட மான்விழியாள்...

அகிலா கோவிந்த்

# மருண்ட மான்விழியாள்...



# அகிலா கோவிந்த்



அன்றைய தினம் பொலபொலவென விடியாமல் நிதானமாகவே விடிந்தது போல் நந்தினிக்குத் தோன்றியது. எழுந்து கைகளை பரபரவென தேய்த்து கண்களில் ஒற்றி "முருகா சரணம்" சொல்லியவள் ஜன்னலுக்கு வெளியே வீட்டின் சிறிய தோட்டத்தைப் பார்த்தாள்.

சிறுசிறு மலர்ச் செடிகள், கீச்சுக் குரலில் அலகுகளை கொத்தி விளையாடும் சிட்டுக் குருவிகளின் அழகு எல்லாம் கண்குளிர தெரிந்தது.

அழகிய விழிகளை அகல விரித்து ரசித்தவள் மணியைப் பார்த்தாள். ஆறு மணி. இன்று புதியதாய் ஒரு கம்பெனிக்கு இன்டர்வியுவிற்கு செல்லவேண்டும் என்பது உரைத்தது.



# 1



அன்றைய தினம் பொலபொலவென விடியாமல் நிதானமாகவே விடிந்தது போல் நந்தினிக்குத் தோன்றியது. எழுந்து கைகளை பரபரவென தேய்த்து கண்களில் ஒற்றி முருகா சரணம் சொல்லியவள் ஜன்னலுக்கு வெளியே வீட்டின் சிறிய தோட்டத்தைப் பார்த்தாள்.

சிறுசிறு மலர்ச் செடிகள், கீச்சுக் குரலில் அலகுகளை கொத்தி விளையாடும் சிட்டுக் குருவிகளின் அழகு எல்லாம் கண்குளிர தெரிந்தது.

அழகிய விழிகளை அகல விரித்து ரசித்தவள் மணியைப் பார்த்தாள். ஆறு மணி. இன்று புதியதாய் ஒரு கம்பெனிக்கு இன்டர்வியுவிற்கு செல்லவேண்டும் என்பது உரைத்தது.

ஆயினும், இன்டர்வியூ என்ற போதும் அவள் எவ்விதப் பதட்டமும் காட்டவில்லை. நிதானமாகவே எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுக் கிளம்பியபோது மணி எட்டு.

எதிரே வந்து புன்னகைத்த அன்புத் தாயிடம் பெரிதாய் பற்களைக் காட்டி முறுவலித்தவள், அப்படியே அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கொஞ்சவும் செய்தாள்.

அம்மா, இன்று டிபன் பிரமாதம், உங்கள் கைவண்ணமே தனி.. என்றபடி செல்லத்தாயின் முகத்தோடு முகம் வைத்து ஆடினாள்.

தாய் பூரணியோ சங்கோஜப்பட்டவளாய், ஐயோ... விடு... கண்ணு உன் புது டிரஸ்ஸில் கறை எதுவும் பட்டு விடப் போகிறது.... என பயந்தாள்.

அதெல்லாம் படாது... என்றபடி மேலும் இறுக்கிப்பிடித்து தாயை விடுவித்தவள், அம்மா ஒரு முக்கியமான விஷயம்... என்றாள்.

என்ன கண்ணு?

இன்று புதிதாய் இன்னொரு வேலைக்கான இன்டர் வியுவை அட்டெண்ட் செய்யப் போகிறேன். அதில் செலக்ட் ஆகி விட்டால் இந்த கூட்டல் கழித்தல் குமாஸ்தா வேலைக்கு டாட்டா காட்டி விட்டு அங்கு சென்று விடுவேன். உங்களுக்குச் சம்மதம்தானே?



பெரிய விஷயம் ஒன்றை வெகு சாதாரணமாய் மகள் சொன்னாலும் பூரணி அதிரவில்லை. எல்லாம் உனக்குத் தெரியாதா கண்ணு...? என்றவள்.

அப்பாவிடம் சொல்லி விட்டாயா? என்றாள் ஞாபகம் சொண்டவளாய்.

நேற்றே டாடியிடம் சொல்லிவிட்டேன். இன்று காலை ஷிப்ட்டுக்கு கிளம்பும்போது ஆல்த பெஸ்ட் சொல்லி வாழ்த்தி விட்டுத்தான் சென்றாரம்மா...

நந்தினி சிரிப்பு மாறாமல் சொல்ல பிறகென்ன.... கிளம்பு.. கண்ணு...! என அவளும் தன் பங்குக்கு தாடையை கொஞ்சி மகளுக்கு விடை கொடுத்தாள் பூரணி.

நந்தினி சாலையில் இறங்கி ஸ்கூட்டியை விரட்டினாள். மணியைப் பார்த்தாள். எட்டு அலுவலகத்திற்கு இரண்டு மணி நேர பர்மிஷன் போட்டாயிற்று. எப்படியும் பத்து மணிக்குள் இன்டர்வியூவை முடித்துவிட்டு அலுவலகம் சென்று விடலாம் என எண்ணினாள்.

அவள் வேலை தேடிச் செல்வது டைகர் சலவைத்தூள் எனப்படும் நகரின் பிரபல சோப்பு கம்பெனி.

அட்ரஸ்ஸை சரி பார்த்து, மார்பிள் பளபளப்பில் நவீன டிசைனிங் வேலைப்பாடுகளுடன் பிரமிக்க வைக்கும் அலங்கார முகப்புடன் இருந்த எம்.எம்.எக்ஸ்கோர்ட்ஸில் நுழைந்தாள்.

படபடவென படிகளில் குதி நடையுடன் ஏறியவள் அதே விரைசலுடன் நடந்து ரிசப்ஷனை நெருங்கினாள்.

ரிசப்ஷன் பெண் ரெடிமேடாய் புன்னகைத்து வழி காட்டினாள். லிப்ட் வழியாக முதல் ப்ளோரை அடைந்து நடந்தாள். வரிசையான பாலிமர் இருக்கைகளுடன் இன்டர்வியூ ஹால் தெரிந்தது.

ஒன்லி லேடீஸ் என விளம்பரத்தில் இருந்ததால் அவளைப் போலவே ஐந்தாறு பெண்கள் கையில் சர்டிபிகேட்டுகளுடன் பவ்யமாய் பயபக்தியோடு. நந்தினி மெல்லிய புன்னகை படர இருக்கையொன்றில் போய் அமர்ந்த போது எல்லோரும் நிமிர்ந்து அவளை ஒரு பார்வை பார்த்தனர்.

திரும்பிக் கொண்டனர்.

ஒரு சிறு புன்னகை கூட இவர்களுக்கு வராதா... என ஏக்கமாய் நினைத்த நந்தினி எல்லோரையும் உற்றுக் கவனித்தாள்.

ஐந்தில் மூன்று பேர் அலங்காரத் தேர் போல் அழகுப் பதுமைகளாய் உட்கார்ந்திருந்தனர். அதிலும் நந்தினி பக்கத்தில் அமர்ந்திருந்தவள் ஒரு வண்டி அடித்து இம்மி அசையாமல் உட்கார்ந்து பார்பி ஈர்ப்ஜ நினைவு படுத்தினாள்.

நடக்கப் போவது செகரட்டரி தேர்வா இல்லை அழகிப் போட்டியா?

நந்தினி வியந்தவள் பார்வையை நேராக்கியபோது முன் மேஜையொன்றில் சிறுசிறு பாம்ப்லெட் கார்டுகள் கிடப்பது தெரிந்தது.

கம்பெனி பற்றிய குறிப்புகள் அடங்கிய கார்டு அது. அதில் எம்.எம்.எக்ஸ்போர்ட்ஸின் தயாரிப்பு விவரங்கள், கோடிகளில் நடக்கும் விற்பனை விவரங்கள், கம்பெனியின் சாதனைகள் என எல்லாமே விரிவாய் விளக்கமாய் தரப்பட்டிருந்தது.

கீழே, மோக மகேந்திரன், மேனேஜிங் டைரக்டர்.. என பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்க... சரியான சுய தம்பட்டக்காரனாய் இருப்பானோ? என நந்தினிக்கு சிந்தனை ஓடியது.

கூடவே மணியைப் பார்த்தவள் இன்டர்வியூ ஆரம்பித்து விட்டதா... இன்னும் அசையாப் பதுமைகளாய் இருக்கிறார்களே... என்று எண்ணத் தோன்ற பக்கத்து பார்பி டாலிடம் பேச்சுக் கொடுத்தாள்.

ஆனால் பார்பி டாலோ அவள் கேட்டதற்கு ஓரிரு வார்த்தைகளில் சுருக்கமாய் பதில் சொல்லியபடி மெல்ல அவள் தோள்களில் இடித்தது.

நந்தினி பார்த்ததும் பார்வையாலே மேல் நோக்கி சைகை காட்டியது.

திடுக்கிடலுடன் நிமிர்ந்து பார்த்த நந்தினி மேலும் வியப்பானாள்.

மேலே... சிறிய கும்மிழ் காமிரா ஒன்று மெல்ல சுழன்று கொண்டிருந்தது.

அவளுக்கு புரிந்து விட்டது.

வெளியே அவர்க்ள இருப்பதை நடப்பதையெல்லாம் உள்ளிருந்து எம்.டி அதாவது அந்த மோக மகேந்திரன் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கக் கூடும்.

அதனாலே.. இந்த பதுமைகள் எல்லாம் பேசா மடந்தைகளாய்... பவ்யமாய்... பய பக்தியோடு.. வாலைச் சுருட்டிக் கொண்டு இருக்கிறார்களோ?



நந்தினிக்கு நினைத்தபோது சிரிப்புதான் வந்தது.

இந்த பசப்புக்கெல்லாம் அவள் பயப்படுவதாவது..?

சரியான பணங்காட்டு நரிடி... நீ! எல்லாமே உனக்கு அலட்சியம்தான். தலையில் இடி விழுந்தால்கூட கல்லூளி மங்கினியாய் இருப்பாய்... தோழி நீரஜா ஒரு முறை மெயின் ஹவரில் அவள் மிஸ்ஸை பொருட்படுத்தாது முங்கில நாவல் ஒன்றை அக்கறையாய் படித்துக் கொண்டிருந்தபோது சொன்ன கமெண்ட் இது.

அந்த கல்லூரி நாட்களில் துணிச்சலுக்கு பெயர் பெற்றவள் இந்த இன்டர்வியூக்களை கண்டு மிரள்வதாவது...?

அவள் யோசனையைக் கலைத்தவாறு பணியாள் ரூமிலிருந்து வெளிவந்து சைகை செய்தான்.

பார்பி டால் பயபக்தியாய் எழுந்து அன்ன நடைபோட்டு இன்டர்வியூ அறை நோக்கிச் சென்றது.

மற்ற இரு பெண்களும் குனிந்து ஜெனரல் நாலேட்ஜுக்காக புத்தகம் ஒன்றை புரட்டிக் கொண்டிருக்க.. நந்தினி துப்பட்டாவை மடித்து விட்டவாறு கால் மேல் கால் போட்டுக் கொண்டாள்.

போலி மரியாதைகளை விட தைரியமும் தன்னம்பிக்கையும் அவசியம் என்பது அவள் பாலிசி.

மேலும் பத்து நிமிடங்கள் மௌனமாக நகர்ந்தது.

அடுத்து அவள் முறை என்று வந்ததும் அவள் தயங்கவில்லை.

எழுந்து விடுவிடுவென நடந்து இன்டர்வியூ அறைக்குள் நுழைந்தாள்.

அந்தப் பெரிய ஏஸி ஹாலின் பளபளப்பான மேஜையின் மறுபுறம் குஷன் சீட்டில் அவன்!

நடுத்தர வயசுக்காரனை எதிர்பார்த்தவளுக்கு நெடுநெடு உயரத்துடன் திடகாத்திரமான ஒரு இளைஞர் உட்கார்ந்திருந்தது வெகுவாய் ஆச்சரியப்படுத்தியது..

அவளை நிமிர்ந்து பார்க்காமலே, உட்கார்.. என கர்ஜனைக் குரலில் அவன் சொன்னபோது ஒருமையில் அவன் விளிப்பது கண்டு அதிரத்தான் செய்தாள்.

இருந்தும் முகமலர்ச்சியாய் பவ்யம் காட்டி வணக்கம் சொன்னாள்.

அவள் வணக்கம் சொன்ன விதத்தை கண் கொட்டாமல் பார்த்தான்.

உர்ரென சீரியஸாய் வைத்திருந்த முகத்தின் இறுக்கத்தை தளர்த்திய அவனது உதடுகள் மெல்ல சிரித்தது.

அட... புலி சிரிக்கிறதே... என எண்ணியபடி அவனையே உற்றுப் பார்த்தாள்.

சுருளான முடி தவழும் பரந்த நெற்றி, முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, மின்னலாய் பாயும் கருவிழிகள், ஆஜானுபாகுவான உடற்பயிற்சி உடம்பு, ஒருவித வசீகரத்தன்மையுடன் மற்ற ஆண்களிடமிருந்து மாறுபட்டிருந்த அவனது சுபாவம் நந்தினியை கவனிக்க வைத்தது.

சீட்டில் உட்கார்ந்தவள் அவன் கேட்பதற்கு காத்திராமல் பைலை நீட்டினாள்.

அவளைப் பார்த்த பார்வையை விலக்காமல் வாங்கியவன் படபடவென பைலை புரட்டினான். திருப்பிக்கொடுத்தான்.

அவன் கேட்ட முதல் கேள்வி அவளைத் தூக்கி வாரிப்போட்டது.

என் பெயர் தெரியுமா? சொல்...! என்றான். நந்தினி வியந்தாள்.

அவள் சந்தேகப்பட்டது போல் சரியான சுய தம்பட்டக்காரனாய் இருப்பானோ? என விழிகளை அகல விரித்து அவன் முகக் குறிப்பை பிடிக்க முயன்றாள்.

சுய தம்பட்டத்திற்காக கேட்கவில்லை. வெளியே கம்பெனி பாம்ப்லெட்டில் என் பெயர் போட்டிருந்தது. நீ கூட எடுத்துப் பார்த்தாயே.. உன் ஞாபக சக்திக்காக இந்தக் கேள்வி.

அவனது தெளிவான குரல் விளக்கம் கொடுத்ததும், அட இதப் பார்றா... என கேலியாய் நினைத்தவள் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ஞாபகப்படுத்த வேண்டி அவசியமே இல்லாமல் அவள் உதடுகள் அசைந்தது. மோகன... மகேந்திரன்.. என்றது.

வெரிகுட்! யூ... ஆர்... க்யூட்...! என்னவோ உலகின் ஒன்பதாவது அதிசயத்தை அவள் கண்டு பிடித்துச்சொல்லி விட்டது போல் பாராட்டினான்.



அடுத்து, எனக்கு என்ன வயது... சொல்லு... என கேட்டுத் தொலைப்பானோ... என்று அவள் நினைக்கையிலே அவன் நன்றாய் அவளை உற்றுப் பார்த்து விட்டு, உன் வயதுக்கு மீறுந்த அழகாய்த்தான் தெரிகிறாய்.. என்றான்.

இது போன்ற புகழ்ச்சியில் என் தலை ஒன்றும் கிறுகிறுத்துவிடாது என்பது போல் எவ்வித சலனமுமில்லாமலே அவனைப் பார்த்தாள்

என்ன பேசாமல் இருக்கிறாய்? நான் சொன்ன அழகு விஷயத்தை ஆமோதிக்கிறாயா இல்லை மறுக்கிறாயா?

அவன் வேண்டுமென்றே சீண்டுவது போல் கேட்டதும் நிமிர்ந்து கண்களை முறைப்பது போல் சுருக்கினாள்.

செகரட்டரிக்கான இன்டர்வியூ தேர்வில் இது போன்ற கேள்விகள் ஆவசியம்தானா என்பதை கனம் எம்.டி.அவர்கள் யோசிக்கவேண்டும்...

❒கேலியான அவளது பதிலின் அர்த்தம் உணர்ந்து பெரிதாய் சிரித்தான்.

உனது பதில் சரிதான். ஆனால் நான் அழகு பற்றி பேசியதற்கு முக்கிய காரணமிருக்கிறது.

என்ன காரணம்? என கேட்கக்கூடாது என்பது போல் அவள் இறுக்கமான உதட்டுடன் இருக்க அவனே தொடர்ந்தான்.

எம்.டி. என்ற முறையில் நிறை மீட்டிங்குகள், பார்ட்டிகள், செமினார்கள் என அட்டெண்ட் செய்ய வேண்டியிருக்கும். அது போன்ற சமயங்களில் என்னுடன் செகரெட்டரியாக வரும்போது அழகு விஷயத்தில் சில பொருத்தங்கள் இருக்க வேண்டுமல்லவா?

சரிதான்... இதில் மன்மத கொக்கு நினைப்பு வேறா...? என புருவம் உயர்த்தியவள் கம்பீரமான அவனது அதிகார ஆளுமையைக் கண்டு அசரத்தான் செய்தாள்.

அவன் தொடர்ந்தான்.

அவனது கம்பெனி பற்றி, குறுகிய காலத்தில் எக்ஸ்போர்ட்டில் அதிக மென் பொருள்கள் ஏற்றுமதி செய்து முதல் தரமான இடத்தில் இருப்பது பற்றியெல்லாம் விளக்கினான். எல்லாவற்றுக்கும் பின்னணி தனது அசுரத்தனமான உழைப்பு, தனது அபாரமான மூளை என தொனிக்கும்

வகையில் அவன் தொடர்ந்து பேசியது அவளை சிறிது சலிப்படைடையச் செய்தது.

கையில் தண்டோரா வைத்துக் கொண்டு அடிக்காத குறைதான்! இப்படியொரு தம்பட்டகாரனை முதல் முறையாய் இப்போது தான் தான் சந்திக்கிறோமோ? என்ற நினைப்பு அவளுள் ஓடியது

அவன் பேசிக் கொண்டிருந்தவன் சட்டென நிறுத்தினான்.

இப்படி என்னைப் பற்றி விரிவாய்ச் சொல்கிறானே... எதற்கு என்று தெரியுமா?

அதையும் நீங்களே சொல்லி விட்டால்... கொஞ்சம் நன்றாக இருக்கும்.

அவள் கேலியைப் பொருட்படுத்தாமல் சீரியஸான முகத்துடன் ஸீட்டை விட்டு எழுந்து முன் வந்தான். கைகளை குறுக்காய் கட்டியபடி அவளைப் பார்த்தான்.

பார்வை... என்றால் நிதானமாய் மேலிருந்து கீழ் வரை அவளை ஊடுருவும் பார்வை.

அவளும் அசரவில்லை. தனது அழகிய விழிகளை சற்று அகல விரித்து அவனையே பார்த்தாள்.

பிடறியை உலுக்கிக் கொண்டு நிற்கும் சிங்கம்போல் கம்பீரமாய் உறுத்துக் கொண்டு அவன் நின்றது அவளைக் கவரத்தான் செய்தது.

அவளை மேலும் சிந்திக்கவிடாமல் இரு கைகளையும் தட்டுவது போல் பாவனைசெய்தவன், முக்கியமான கேள்வி ஒன்றை இனிதான் உன்னிடம் கேட்கப் போகிறேன் என்றான் பீடிகை பொங்க

அவள் ஒன்றும் பேசாது தலை சாய்த்து அவனையே பார்த்தாள்.

நான் கேட்கும் இந்தக் கேள்வி உன் வாழ்க்கையை... ஏன்... உன் தலை விதியையே தீர்மானிக்கப் போகிறது. அதனால் யோசித்து கவனமாய் நீ பதில் சொல். சொல்ல வேண்டும் புரிகிறதா?

விஷயத்தைச் சொல்லாமல் ரப்பராய் அவன் இழுக்கிறானே என்ற சினத்தில் வேண்டுமென்றே அவள் தலையை பூம்பூம்மாடு வோல் மேலும் கீழும் ஆட்டினாள். அவனை எரிச்சல் படுத்துவது போல் செய்தாள்.



ஆனால் அவனோ அந்தக் கேள்வி மூலம் நிஜமாகவே அவளை எண்ணெய்க் கடலில் தள்ளி பற்றி எரியச் செய்தான்.

தூக்கி வாரிப் போட்டது நந்தினிக்கு.

நான் உன்னை மணந்து கொள்ள விரும்புகிறேன். சம்மதிக்கிறாயா? என்று கேட்டிருந்தான் மகேந்திரன்.



## 2



அவன் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

அவள் அதிரவில்லை.

கலகலவென முத்துப் பற்கள் தெரிய சிரித்து விட்டாள்.

நல்ல ஜோக் ஸார் இது!

அவள் சொல்ல அவனது முகம் படு சீரியஸானது.

நான் சொல்வது ஜோக் இல்லை. உண்மை நிஜமாய் கேட்கிறேன்...

அவள் ஒரு கணம் சிரிப்பை நிறுத்தி அவனையே உறுத்துப் பார்த்தாள்.

அவன் கண்களில் ஆவலும் ஆர்வமும் மின்ன அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பாவி, நிஜமாய்த்தான் கேட்டிருக்கிறான். வேலைக்கு வந்தவளிடம் கட்டிக் கொள்கிறாயா? என்று கேட்கிறான். என்ன திமிர்.... என்ன தைரியம் இவனுக்கு?

கோபத்துடன் நினைக்கையிலே அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது.

சிரித்தாள்.

இம்முறை அவன் எரிச்சலானான்.

ஏன்... திரும்பத் திரும்ப சிரிக்கிறாய். நான் கேட்டதற்கு பதில் சொல்?

அவள் சிரிப்பை சிரமத்தோடு அடக்கிக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

ஸார்... ஒரு கதை ஞாபகம் வருகிறது. ஒரு இளம்பெண் இப்படித்தான் பெட்டிக்கடை ஒன்றுக்கு கறுப்பு வெல்லம் வாங்கப் போனாளாம். பெட்டிக்கடைக்காரன் அவளிடம் நான் உன்னை கட்டிக் கொள்ள விரும்புகிறேன். கட்டிக் கொள்கிறாயா? என்றானாம். அவளும் பதிலுக்கு விடாமல், பெட்டிக் கடைக்காரரே முதலில் கறுப்பு வெல்லத்தைக் கொடுங்கள். வீட்டிற்குப் போய் காபி போட்டு குடித்துவிட்டு வந்து பதில் சொல்கிறேன் என்றாளாம்.... அதுபோல் தாந் நீங்கள் கேட்கும் கதையும் இருக்கிறது...

அவனது சிவப்பு முகம் சிடுசிடுத்தது.

பெட்டிக்கடைக்காரனும் நானும் ஒன்றா? என்றான் கோபமாய்.

அவள் பதட்டமில்லாமலே அவனைப் பார்த்தாள்.

நிச்சயமாய் இல்லை ஸார்.. ஆனால் ரெண்டு பேரின் கேள்விகளும், நோக்கமும் ஒன்றுதானே சார்..?

அவன் தலையைச் சிலுப்பிக்கொண்டு படு சீரியஸான பார்வை அவளைப் பார்த்தான்.

இதோ... பார்... உன்... பெயர்... என்ன... ஆங்... நந்தினி... நீ நினைப்பது போல் நான் ஒரு சராசரியாய் சபலத்தோடு கேட்கவில்லை. ஒரு சரியான தொலைநோக்குப் பார்வையுடன்தான் கேட்கிறேன்....

அது... என்ன தொலை நோக்குப் பார்வை ஸார்? எனக்குப் புரியவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்....

அவள் போலியான பவ்யம் காட்டியதை சட்டை செய்யாமல் அவன் தொடர்ந்தான்.

நான் சொல்வதை மேலோட்டமாய் பார்த்தால் உனக்கு தப்பாய்த் தெரியும். ஆனால் கொஞ்சம் ஆழமாய் சிந்தித்தால் உனக்கு எல்லாம் புரியும்...

அப்படி ஆழமாய் சிந்திப்பது எப்படியென்றும் நீங்களே கூறிவிடுங்கள்.... காதணிகள் குலுங்கக் கேட்ட அவளது புன்னகையில் பரிகாசம் ததும்பியது.

அதாவது ஒரு ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் திருமணம் என்ற பந்தம் மூலம் இணைய வேண்டும் என்பது இயற்கையின் நெறி. நம் வாழ்வின்



முறை. சரியாக தான் தேடும் பெண்ணை ஒருவன் சந்திக்கும்போது தன்னை மீறி தன் ஆசையை அவன் வெளியிடுகிறான். அதுபோல் தான் நானும். நீ எனக்கு ரொம்ப மேட்சாக இருப்பாய் என்று கருதுவதாலே இப்படியொரு வாய்ப்பை உனக்கு அளிக்கிறேன். என்ன சொல்கிறாய்?

அவன் பேசப் பேச அவளுக்கு காலில் உள்ளதை தூக்கி அடிக்கலாம் போல் தான் இருந்தது.

இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு.

ஹலோ எம்.டி.ஸார், நான் வேலை தேடித்தான் வந்தேன். உங்களிடம் வாழ்க்கை பிச்சை கேட்டு வரவில்லை. அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

அவன் அதற்கும் வெட்கமில்லாமல் தலையாட்டினான்.

புரிகிறது... மிஸ் நந்தினி. ஆனால் நான் தரும் வாய்ப்பு.... ஒரு ஜாக்பாட.... ஆஃபர்.... லக்கி பிரைஸ் அடிக்கிற மாதிரி....

அடடாடா...!அடாடா... எனக்கு லக்கி விரைஸா? நான் நினைக்கவே இல்லையே?

நிஜமாகவே அவள் சூள் கொட்டியபோது அவள் இன்னமும் கேலியை விடவில்லை என்பது புரிந்து அவன் முகம் சற்று சிவந்தது.

நந்தினி, என்னைச் சாதாரணமாக நினைத்து விடாதே.... மாதம் பல கோடிகள் டர்ன் ஓவர் ஆகும் நம்பர் ஒன் கம்பெனியை நடத்தி வருகிறேன். ஏதோ உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்று வெளிப்படையாக பேசுகிறேன், கேட்கிறேன். இப்படி வலிய வந்து கேட்பதால் என்னை குறைவாகவோ இளக்காரமாகவோ நினைத்து விடாதே. என்னிடம் ஐயாயிரம் ரூபாய் வேலை தேடி வந்திருக்கும் உனக்கு, உன்னை பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுக்கு உரிமையாளராய் மகாராணியாய் ஆகச் சொல்கிறேன். இது நிஜமாக ஜாக்பாட் ஆஃபர்தானே? லட்சத்தில் ஒருவருக்குக் கிடைக்கும் லக்கி பிரைஸ்தானே?

அவன் தொடர்ந்து விடாது சொல்லியது கண்டு அவள் தலை சுற்றத்தான் செய்தது. மை விழிகளை அகல விரித்து எவ்வித சலனமுமில்லாதவளாய் விழித்துக் கொண்டு தான் இருந்தாள்.

அது அவனுக்கு அவள் யோசிப்பது போல் தோன்றவே. பதில் அவசரமில்லை வீட்டிற்குப் போய் நிதானமாய் சிந்தித்து நாளைச் சொல்லலாம்.

அப்பாடா... தப்பித்தோம்!

அவள் எழுந்து விட்டாள்.

அவன் தன் விஸிட்டிங் கார்டு ஒன்றை நீட்டினான்.

இதில் எனது செல் நம்பர் இருக்கிறது. உன் முடிவை நீ போனிலே சொல்லலாம்.

ரொம்ப நன்றி ஸார்.

பவ்யமாய் வாங்கிக் கொண்டு நகர்ந்தவள் நின்னு அவனை வினோத பார்வை பார்த்தாள்.

அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம் ஸார்....

என்ன?

எனக்குப் பிறகு நிறைய அழகிகள் இன்டர்வியூவிற்கு வர காத்திருக்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் மனசை தளர விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்...

இந்த கேலிக்கு பயப்படுவான் என்று பார்த்தால் இதற்கும் வெட்கமில்லாமல் சிரித்தான்.

அந்த பயம் உனக்குத் தேவையே இல்லை நந்தினி. ஏனெனில் என்னுடைய இதயம் இப்போது இங்கு இல்லை. அங்கு ஷிப்ட் ஆகி விட்டது. என்றபடி அவள் நெஞ்சைக் காட்ட... சிவந்த முகம் மேலும் கோபமாய் சிவக்க பல்லைக் கடித்தபடி வெளியே வந்தாள் நந்தினி



## 3



அத்தோடு நந்தினி அந்த நிகழ்ச்சியையும், இன்டர்வியூ என்ற பெயரில் மோகன மகேந்திரன் நடத்திய கூத்தையும் மறந்து விட்டாள் என்றுதான் சொல்லவேண்டும்.



தாயும் தந்தையும் ஆர்வமாய் இன்டர்வியூ பற்றி கேட்டபோது கூட, கம்பெனி டுபாக்கூர் கம்பெனி போல் தெரிகிறது. வேலை கிடைத்தாலும் வேஸ்ட்... என்று கூறி வாயடைத்து விட்டாள். அவன் மோகன மகேந்திரன் கொடுத்த விசிட்டிங் கார்டையும் சுக்கு நூறாய் கிழித்து அவன் அலுவலகக் குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டு வந்தது அடிக்கடி அவள் ஞாபகத்திற்கு வந்து நகைப்பையும் ஏற்படுத்தியது.

ஆனால் மூன்றாம் நாள் மாலையில் அவள் வீட்டு முன்காரில் ஒரு நடுத்தரப் பெண்மணியுடன் வந்து அந்த மோக மகேந்திரன் இறங்கியபோது அவளுக்கு திக்கென்று தான் இருந்தது.

யாரம்மா.. இவர்கள்.. நம் வீடு நோக்கி வருகிறார்கள்... உனக்குத் தெரியுமா? என பக்கத்திலிருந்து தாய் கேட்டபோது அவள் நிஜமாகவே விழிக்கத்தான் செய்தாள்.

அவன் மோகன மகேந்திரனோ விறுவிறுவென நடந்து வந்தவன், ஹாய்... நந்தினி... என ரொம்ப நாள் பழக்கம் போல் உற்சாகமாய் கூப்பிட்டு கைகளை அசைக்க வேறு செய்தான்.

அம்மா, இது நான் அன்று இன்டர்வியூவிற்கு போன தாய் சொன்னனே... அந்தக் கம்பெனியின் எம்.டி ஆள். கொஞ்சம் நட்டு கழன்ற கேஸ்... நந்தினி கிசுகிசுக்க என்னம்மா சொல்கிறாய்? என்றாள் தாய் திகிலான பயத்தோடு.

ஆமாம். அன்று நடந்ததை உங்களிடம் சொல்லவில்லை. இன்டர்வியூ போன இடத்தில் நான் உன்னை கட்டிக்கொள்கிறேன். உனக்கு விருப்பமா? என்றெல்லாம் உளறினார்...

அப்படியா...? சரி... இருக்கட்டும்... ஆனால் இப்போது... இங்கு ஏனம்மா வருகிறார்கள்.?

தாய் கேட்டதற்கு புருவம் உயர வியந்தவள் தன் வீட்டை எப்படி இவன் கண்டு பிடித்தான்...? என சிந்தித்தபோது இன்டர்வியூவிற்காக அட்ரஸைக் கொடுத்தது அவள் ஞாபகத்திற்கு வந்தது.

அவள் உதட்டைக் கடித்தபடி அதை போனில் வெறித்திருக்க விறுவிறுவென இருவரும் பக்கத்தில் வந்து விட்டனர்.

அந்த நடுத்தரப் பெண்மணி திரும்பி அவனைப் பார்த்து, இதுதான் நீ சொன்ன பெண்ணா? என்று கேட்க, அவன் மகேந்திரன், யெஸ்! யெஸ்! என்றபடி வேகமாய் தலையாட்டினான்.

உடனே அவன் திரும்பி இருவருக்கும பெரிய வணக்கம் வைத்தான்.

பதிலுக்கு நமஸ்கரித்து நந்தினியும் தாயும் திகைத்துப் பார்க்க, உங்களிடம் ஒரு விஷயமாய் பேச வந்திருக்கிறோம் பேசலாமா? என்றாள் அவள்.

வேறு வழியில்லாமல், வாருங்கள்... என உபசரித்து உள் ஹால் அழைத்துச் சென்றார்கள். நடுநயமான சோபாவில் உட்கார்ந்ததும் மகேந்திரன் வீட்டைச் சுற்றும் முற்றும் பார்த்து அளவெடுக்க... அவளோ நந்தினியை மேலிருந்து கீழ்வரை அளவெடுத்தாள்.

நந்தினிக்கு விஷயம் புரிந்து விட்டது.

கடைசியில் அவளை பெண்கேட்டு வீடு வரை வந்து விட்டானா? அவ்வளவு பெரிய ஜூசா இந்த மோகன மகேந்திரன்?

துணுக்குற்று அவனையே உற்றுப் பார்க்க அவனும் பெரிய மன்மத கொக்கு பெண் பார்க்க வந்திருப்பது போல் அசடு வழிய நெளிந்து வளைந்து அவளை கோமாளிப்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றையும்விட அம்மா பூரணிதான் ரொம்பவும் பதட்டமாயிருந்தாள்.

அடுக்களை பக்கம் விறுவிறுவென ஓடி அவளை சைகையிலே அழைத்தாள். என்னடி இது கூத்து? பார்த்தால் பெரிய இடம் போல் தெரிகிறது? இப்படி திடுதிப்பென்று வந்திருக்கிறார்கள்?

படபடத்த தாயின் கைகளை அழுத்தமாய்ப் பிடித்து சாந்தப்படுத்திய நந்தினி, அம்மா, எவ்வித பதற்றமும் வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் பாகி மட்டும் கொண்டு வாருங்கள்... என்று சொல்லியபடி முன்புறம் வந்து அவர்கள் இருவருக்கும் முன்னால் உட்கார்ந்தாள்.

மகேந்திரன் மெல்ல நிமிர்ந்து பேச்சை ஆரம்பித்தான்.

நந்தினி.... அது... வந்து....

சொல்லுங்கள்....

அன்று இன்டர்வியூவில் உன்னிடம் முன்பின் யோசிக்காமல் டக்கென்று கேட்டு விட்டேன். பிறகுதான் அது எவ்வளவு பெரிய தவறு என்பது புரிந்தது. எதற்கும் ஒரு முறை என்று இருக்கிறது அல்லவா... அதான்... அதனால்தான்...



மகேந்திரன் மறுபடி தயங்க நந்தினி எரிச்சலை அடக்கிக் கொண்டு, ம் ம்... சொல்லுங்கள்... என்றாள்.

இவர்கள் என் சகோதரி பெயர் வேலம்மாள். கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராய் இருக்கிறார்கள்....

மகேந்திரன் தன் உரை முடிந்தது போல் அத்தோடு பேச்சை நிறுத்த... அந்த நடுத்தர பெண்மணி தொடர ஆரம்பித்தார்.

ஆமாமம்மா... இந்த மகேந்திரன் உன்னைப் பார்த்திருக்கிறான். உடனே அவனுக்கு உன்னை பிடித்துப் போயிற்று. அப்படி பிடித்துப் போனால் முறைப்படி பெரியவர்களிடம் பேசி பெண் கேட்க சொல்வதை விட்டுவிட்டு அவனே உன்னிடம் தத்து பித்து என்று உளறியிருக்கிறான். அதையெல்லாம் நீ பெரிதாக எடுத்துக்கொள்ளாதே. ஏனெனில் இது போன்ற விஷயங்களில் அவன் அனுபவ ஞானமில்லாத.... மக்கு...

சகோதரி தன்னை பேச்சால் குட்டுவதை கூட உணராமல், யாரையோ சொல்வது போல் அவளைப் பார்த்து டூத் பேஸ்ட் விளம்பரமாய் இளித்துக்கொண்டிருந்தான் மகேந்திரன்.

அதற்குள் பூரணி உள்ளிருந்து இருவருக்கும் கப் அண்ட் சாஸரில் காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

காபியை குடியுங்கள்... சொல்லிய நந்தினி, தாய்க்கு பார்வையாலே, நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை. நான் சமாளித்து விடுவேன்... என்ற செய்தியையும் சொன்னாள்.

ஆனால் பூரணியோ பயம் விலகாதவளாய் எல்லோரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தாள்.

மகேந்திரனின் சகோதரி விஷயத்தை பூடகமாய் ஆரம்பித்து மெல்ல மெல்ல சுற்றி வளைத்தவள் கடைசியில் நேரடியாகவே கேட்டு விட்டாள்.

இதோ பாரம்மா நந்தினி, அவனோ பெரிய தொழிலதிபர். தொழிலில் நிறைய சாதித்தவன். அவனுக்கு உன்னை ரொம்ப பிடித்திருக்கிறது. உன்னை தன் மனைவியாக்கிக் கொள் விரும்புகிறான். உன்னுடைய அபிப்ராயம்தான் என்ன...? கேட்டபோது நந்தினியால் முன்பு போல் சட்டென எடுத்தெறிந்து முகம் சுண்டி பேச இயலவில்லை. இவ்வளவு ஆர்வமாய் கேட்பவருக்கு புரிகிற மாதிரியாகத்தான் பதில் சொல்ல வேண்டும் என நினைத்தவள் மெல்ல தலையசைப்புடன் அவர்களைப் பார்த்தாள்.

நீங்கள் கேட்பது புரிகிறது ஆனால்...

எதுவானாலும் சொல்லம்மா...

என்னுடைய கல்யாணம் பற்றி இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்துதான் யோசிக்க இருக்கிறேன். அதனால் இப்போது அது பற்றி எந்த முடிவுமோ எவ்வித அபிப்ராயமோ என்னிடம் இல்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல... என்னுடைய பெற்றோர்களின் ஆசையும் அதுதான்.... என்றபடி நந்தினி தாயைப் பார்த்து சைகையுடன் பேச்சை நிறுத்தினாள்.

பூரணி புரிந்து கொண்டு பலமாய் தலையாட்டினாள்.

ஆமாம்... ஆமாம்... குழந்தைக்கு இன்னும் இரண்டு மூன்று வருடம் கழித்துதான் திருமணம் செய்ய நானும் அவரும முடிவெடுத்திருக்கிறோம். அதனால் அவசமில்லை. சொல்வதை நீங்கள் தப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது.....

பூரணி இப்படிச் சொன்னதும் புரிந்து கொள்வார்கள் என்று பார்த்தால் அவள் அசரவில்லை. நீங்க சொல்வது எங்களுக்குப் புரிகிறது. ஆனால் பாருங்கள் எங்களுக்கு அவசரமில்லையம்மா. நந்தினிக்காக நாங்கள் காத்திருக்கத்தயார். இது என்னுடைய அபிப்ராயம் மட்டுமல்ல, மகேந்திரனின் விரும்பமு; அதுதான்....

சகோதரி சொல்லி முடிக்கவும் பூம்பூம் மாடு போல மகேந்திரனும் தலையாட்டினான்.

நந்தினிக்காக எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார். அவளுடைய விருப்பம் மட்டும் தெரிந்தால் போதும்....

மகேந்திரன் அவளைப் பார்த்து அசடு வழிய சிரித்தபடி சொன்னபோது, ருப்பர் இளிச்சவாயன்... என்று சொல்வார்களே அது இவன் போன்ற ஆட்களைத்தானோ...? என்று வியப்பு தோன்ற அவனையே உறுத்துப் பார்த்தாள்.

ஒரு வழியாய் கடைசியில், யோசித்து பதில் சொல்கிறோம்... எனச் சொல்லி இருவரையும் தள்ளாத குறையாய் அனுப்பி வைத்தனர்

அவர்கள் சென்றதும் அதுவரை அடக்கி வைத்திருந்த சிரிப்பலைகளை மேலும் தடுக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள் நந்தினி.





# 4



விஷயம் அத்தோடு முடிந்து விட்டது... எனத்தான் நினைத்து மகேந்திரன் விஷயத்தை அப்படியே மறந்து விட்டாள் நந்தினி.

ஆனால் மூன்றாவது நாள் தந்தை சிவராமன் அலுவலகத்திலிருந்து சிந்தனை பொதிந்த முகமாய்த் திரும்பியபோது விஷயம் புரிந்தது.

உட்கார் நந்தினி.... ஒரு முக்கியமான விஷயம்... என்றபோது வேலை முடிந்து வந்த களைப்பைக்கூட பொருட்படுத்தாமல் ஹாண்ட் பேக்குடன் எதிரில் உட்கார்ந்தாள் நந்தினி.

இன்று அவர் என் அலுவலகத்திற்கே தேடி வந்து விட்டாரம்மா... என்று சிவராமன் ஆரம்பித்ததும் அவரா...? யாரைச் சொல்கிறீர்கள்? என்றாள் நந்தினி துணுக்குற்றவளாய்.

அதான்... நந்தும்மா; அந்த தொழிலதிபர் உன்னை பெண் கேட்டு வந்த மகேந்திரன்... என்றபோது நந்தினிக்கு நிஜமாகவே தூக்கி வாரிப் போட்டது.

அந்த லூசு அங்கேயும் வந்து விட்டதா?

தன்னை மீறி எண்ணத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்தி விட்டாள் நந்தினி. ஆனால் அதையும் சிவராமன் திருத்தினார்.

அவரை லூசு என்று கூடச் சொல்ல முடியாது. உன்மேல் பைத்தியமாய் இருக்கிறார். அப்படி ஒரு விருப்பம் பிரியம் உன் மேல் வைத்து இருக்கிறார். உன்னை மணமுடிக்க என் காலைப் பிடித்துக் கெஞ்சாத குறைதான். அவ்வளவு பெரிய கோடீஸ்வரர் தொழிலதிபர் என்னிடம் இப்படிக் கெஞ்சுவதைப் பார்த்தால்.. எனக்கே சங்கடமாய் போய் விட்டது..

நந்தினி கண்கள் விரிய பார்த்துக் கன்னத்திடில் கை வைத்தவள் சுவாரஸ்யமானாள்.

பிறகு எப்படிச் சமாளித்தீர்கள்...?

அது ஒரு வழியாய் வீட்டில் பேசி முடிவெடுத்துச் சொல்கிறேன் என்று அனுப்பி வைத்தேன். ஆனாலும என்னால் நம்ப முடியவில்லை. எல்லாமே வியப்பாய் இருக்கிறது.

வியப்பா...? என்னப்பா சொல்கிறீர்கள்?

ஆமாமம்மா. அவர் வந்து போனதும் எனது அலுவலக நண்பர்கள் எல்லாம் என்னை பிலுபிலுவென பிடித்துக்கொண்டார்கள். என்ன விஷயம் என்பதை நான் சொன்னதும் அவர்கள் நம்ப முடியாதவர்களாய் மகேந்திரனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

அப்படியா....? மகேந்திரன் பற்றி அப்படி என்ன சொன்னார்கள்?

மகேந்திரன் பெரிய பிஸினெஸ் மேன் மட்டுமல்ல நம் நகரின் நம்பர் ஒன் கோடீஸ்வரராம். சின்ன வயதிலே தனது சாதுர்யத்தால், கடும் உழைப்பால் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியிருக்கிறாராம். அவரைப் போன்ற வி.ஐ.பி.களுடன் பேச நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமாம். அப்படி இப்படியென என்னவெல்லாமோ சொன்னார்கள்....

தந்தை சொல்லச் சொல்ல அதற்கு மேல் அடக்க முடியாதவளாய் கலகலவென நகைக்க ஆரம்பித்து விட்டாள் நந்தினி.

சிராமன் பேச்சை நிறுத்தி விட்டு சீரியஸ்ஸாய்ப் பார்த்தார்.

என்னம்மா சிரிக்கிறாய்?

பின்... என்னப்பா...? அவரைப் பார்த்தால் சின்ன நாகரீகமோ இங்கிதமோ தெரியாத ஜூரக போல் தான் இருக்கிறது? ஒரு ஆண் மகனுக்குரிய கம்பீரம் கொஞ்சமும் இல்லாமல் இப்படியா ஒரு பெண்ணைப் பார்த்து வழிவது? அவர் வவழிந்தது போதாதென்று ஒரு அக்காவை வேறு கூட்டி வந்து வெட்கமில்லாமல் பெண் வேறு கேட்டுப் போய் விட்டார்.

நந்தினி சொல்ல... இம்முறை சிவராமன் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

நந்தினி புரியாதவளாய் வில் போன் புருவங்களை உயர்த்தினாள்.

என்னப்பா?

நீ ஒன்றை மறந்து விட்டாய் நந்தினி. எல்லாவற்றுக்கும் ஒரு முக்கி காரணமிருக்கிறது. அது என்ன தெரியுமா?

எனக்குத் தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள்.....

உன் அழகு நந்தினி! உன் அபரீதமான அழகு! அதுதான் காரணம். மகேந்திரன் அதில் தான் பிடித்துப் போய் மயக்கமாய் இருக்கிறார்....

ஆனால் நந்தினி சலித்தாள்.



நல்ல அழகுப்பா! எல்லாம் குரங்கு பிடித்த கதையாய் இருக்கிறது. இப்படி ஒருவன் பெண் கேட்டு விடாமல் அலைவானா? எனக்கென்னவோ மகேந்திரன் விஷயம் புதிராய்த்தான் இருக்கிறது....

சிவராமன் அதற்கும் விளக்கமளித்தார்.

இல்லை ந்நதினி. நீ நினைப்பது போல் இல்லை. சில பணக்கார ஆண்கள் ஒரு பெண்ணைப் பார்த்துப் பிடித்து விட்டது என்றால் அவளை எப்படியாவது தன் மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரே குறியோடு அலைவர்கள். அப்படித்தான் மகேந்திர்ன் இருக்கிறார் என நினைக்கிறேன்.

ஆனால் நந்தினி உறுதிப்பட பேசினாள்.

அப்பா... அவர் எப்படி வேண்டுமானாலும் எந்தக் குறியோடும் அலைந்து விட்டுப் போகட்டும். ஆனால் எனக்கு இதெல்லாம் எரிச்சலைத்தான் ஏற்படுத்துகிறது. அடுத்த முறை அந்த மகேந்திரன் இது போன்று என்னிடம் ஏதாவது கேட்டு வந்தாரென்றால் அவர் நன்றாக வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிறார்... அது மட்டும் உறுதி....

நந்தினி இவ்வியத்தில் தீர்மானமாய்த்தான் இருந்தாள். ஆனால் அடுத்த இரண்டு நாளில் ஊரிலிருந்து வீவுக்கு குழந்தைகளுடன் வந்த சகோதரி நளினாவின் பேச்சு அவள் உறுதியைக் கலைப்பதாய் இருந்தது.

நளினா அவளை விட மூன்று வயது மூத்தவள். இரண்டு வருடங்களுக்கு முன் திருமணமாகி திருச்சி சென்றவள். கணவருக்கு அரசாங்க அலுவலக வேலை. இரண்டு குழந்தைகள். அளவான குடும்பம். நிம்மதியான வாழ்க்கை என்று இருந்தாலும் அவள் சலித்தாள்.

ஆனாலும்..... பார் நந்து... இவரைப் போன்ற மாத சம்பளக்காரர்களைக் கட்டிக்கொண்டு நான் படுகிற அவஸ்தை சொல்லி முடியாது....

நந்தினி வியப்பாய் அவளைப் பார்த்தாள்.

என்னக்கா சொல்கிறாய்? அத்தான் தான் கை நிறைய சம்பளம் வாங்குகிறாரே... பின் என்ன கவலை உனக்கு?

நளினா சற்றே பெருமூச்சு விட்டவாறு அவளைப் பார்த்தாள்.

என்ன சம்பளம் வாங்கி... என்ன பிரயோஜனம்? பாதி சம்பளம் லோன் பிடித்தம் அது இதுவென சென்று விடுகிறது. மீதி சம்பத்தில்

அத்தனையும் பட்ஜெட்தான். பட்ஜெட் போட்டுத்தான் செலவழிக்கவேண்டும். மாம் ஒரு நாள் சினிமா, ஒரு நாள் பீச், ஒரு நாள் பூங்கா, ஒரு நாள் ஹோட்டல் என எல்லாமே அந்த ஒரு நாள் பட்ஜெட்தான். அதற்கு மேல் என்றால்... அவர் புலம்ப ஆரம்பித்துவிடுவார். நேற்று கூட பார் பஸ் ஸ்டாண்டில் இருந்து நம் வீ வருவதற்கு கூட ஆட்டோலக்காரனிடம் ஒரே கசடல் தான். ஐந்து ரூபாய்க்காக பத்து நிமிடம் அவனிடம் வாய்ச்சவடால் அடித்து கூலியை குறைக்க வேண்டியதாயிற்று. எந்த ஒரு விஷயத்திற்கும் பர்ஸில் இருந்து ரூபாயை எடுத்துப் பார்த்து செலவழிக்க வேண்டிய கட்டாயம் ஒரு நோட்டு அதிகமாய் போய் விட்டால் பின் மாதக் கடைசியில் விழி பிதுங்கி விடும் நிலைமை எங்களுக்கு!

அக்கா சொன்னதைக் கேட்டு ஆச்சரியமும் சிரிப்பும் வந்தவளாய், அதற்கு என்னக்கா செய்ய முடியும்? இப்போது உள்ள சூழ்நிலை, விலை வாசிகள் அப்படி ஏறிவி;டன.. என்றாள் சாந்தப் படுத்துபவளாய்.

ஆனால் நளினா மறுப்பாய் தலையசைத்தாள்.

நான் அதைச்சொல்லவில்லை நந்தினி. நான் சொல்ல வந்ததே வேறு...

வேறவா... என்ன சொல்கிறாய்?

நீயும் என்னைப் போல் வாழ்க்கையில் மாதச் சம்பளக்காரரைக் கட்டிக்கொண்டு அவதிப்படாதே. கட்டு கட்டாய் சம்பாதிக்கும் பிஸினெஸ் மேன் மாதிரி யாரையாவது ஒருவனை பிடித்துகு;கொள் என்ற சொல்லவருகிறேன்...

சரிதான்... நல்ல ஐடியாதான்...!

நந்தினி ரஸித்து சிரிக்க நளினா திருமபி அவள் பக்கம் வந்தவள் அவளை சீரியஸாக உற்றுப் பார்த்தாள்.

நந்தினி, இன்னும் நான் சொல்ல வருவது உனக்குப் புரியவில்லை?

புரியவில்லை...? என்னக்கா சொல்கிறாய்? என்றாள் நந்தினி அதே வியப்புடன் தலை சாய்த்துக்கொண்டு.

அதான் நந்தினி, யாரோ ஒரு பெரிய தொழிலதிபர் உன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும் என துடியாய் துடித்து உன்னையே சுற்றி வருகிறாராமே. பேசாமல் அவரை நீ கட்டிக்கொள்ள வேண்டியதுதானே?



நளினா சர்வ சாதாரணமாய்க் கேட்க அப்போது தான் அவள் எங்கு சுற்றி எதைச் சொல்ல வருகிறாள் என்பது நந்தினிக்குப் புரிந்தது. இடுக்கிட்டுப் போனவளாய் அவளையே பார்த்தாள் நந்தினி.



# 5



நந்தினிக்கு சட்டென உரைத்தது.

அட... அக்கா நளினா இவ்வளவு சாதுர்யமாய் நம்மிடம் பேசுகிறாளே...? என்ற வியப்புடன் அவளை நோக்கியவள், என்னக்கா அதற்குள் உனக்கு விஷயம் தெரிந்துவிட்டதா? என்றாள்.

தெரியும் நந்தினி. அம்மாதான் சொன்னார்கள் இருந்தாலும் நீயும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு. யார் அவர்? எப்படி பெண் கேட்கும் விஷயம் வந்தது?

அக்கா கேட்டதும் நந்தினி கதை போல் சொல்ல ஆரம்பித்தாள். இன்டர்வியூவில் ஆரம்பித்து அப்பா அலுவலகம் வரை சென்று கேட்டது வரை ஒன்று விடாமல் சொன்னாள்.

நளினா அதிராமல் குதூகலித்தாள். அப்ப சரிதான். உன்னைப் பார்த்தவுடன் ரோமான்ஸ். கண்டதும் காதல் அவருக்கு ஸ்டார்ட் ஆயிருக்கு...!

நந்தினிக்கோ எரிச்சலாய் வந்தது.

ஐயோ... அக்கா, நான் அவரை லூசு என்கிறேன்... நீ போய் காதல் என்கிறாயே?

ஆனால் அதற்கும் விளக்கம் கொடுத்தாள்.

உனக்குத் தெரியாதா நந்தினி? லூசுக்கள் தான் காதலிப்பார்கள். காதலிப்பவர்களும் அந்த காதல் மயக்கத்தில் லூசுகளாகி விடுவார்க்ள....

நந்தினி போலிக் கோபத்துடன் அவளை முறைக்க அவள் கைகளைப் பிடித்து தட்டியபடி சிரித்தாள் நளினா.

நந்தினி அதையெல்லாம் விடு. நான் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்....

ம்ம்...

அவர்... பெயர் என்ன சொன்னாய்..? மகேந்திரனா? ஆள் பார்ப்பதற்கு எப்படி? ஹாண்ட்சம்மா...? இல்லை சுமாரா... இல்லை அதைவிட சுமாரா?

நளினா கேட்டதும்தான் நந்தினி முதல் முறையாய் மகேந்திரனின் உருவத்தை நினைத்துப் பார்த்தாள்.

கேட்பது பேசுவது என்னவோ கோமாளித்தனமாக இருந்தாலும் நெடுநெடு உயரமாய், திடமான புஜங்களும் கம்பீரமான உடல் வாகும் கூடிய நல்ல பர்ஸனாலிட்டி மகேந்திரனுக்கு. சுருள் தவழும் கேசம், பரந்த நெற்றியில் புரள காந்தக் கண்களால் சடார் சடாரென பார்க்கும்போது அப்படியே வேல் குத்தும் விழிகள் போல் அவளை அது ஊடுருவத்தானே செய்தது?

அதில் ஒரு வசீகரம் இருக்கத்தானே செய்தது?

என்ன யோசிக்கிறாய்? உருவம் ஞாபகமிருக்கிறதா. இல்லை மறந்து போயிற்றா?

ஞாபகமிருக்கிறது....

பின் சொல்லு பார்க்கலாம். உ; அபிப்ராயத்தில் எத்தனை மார்க் போடலாம்?

மார்க்கெல்லாம் தேவையில்லை. கொஞ்சம் சுமார் ரகம்... என இழுத்துச் சொல்ல வந்தவள் தன்னையறியாமலே, ஆனால் ஓரளவு நல்ல பர்ஸனாலிட்டி தான்..! என்றாள்.

பின் வேறு... என்ன....? கட்டிக்கொள்!

என்னது...? என்ன சொல்கிறாய்...?

கட்டிக்கொள் என்கிறேன்! பின் என்ன நந்தினி? ஆளிடம் பணம் இருக்கிறது. அருவெறுக்கத்தக்க முகம் இல்லையே... பர்ஸனாலிட்டி வேறு இருக்கிறது என்கிறாய். வேறு... நீ ஒரு ஆணிடம் என்ன எதிர்பார்க்க வேண்டும். எதிர்பார்க்க முடியும்? அதான் சீக்கிரம்முடிவெடு என்கிறேன்.

நளினா பேசப் பேச நந்தினிக்கு ஆச்சரியத்தை விட எரிச்சலே அதிகமாகியது.



ஐயோ... கொஞ்சம் நிறுத்துகிறாயா அக்கா? விட்டால்... நீ பாட்டுக்கு பேசிக்கொண்டே போகிறாய்... முதலில் என் நிலையை தெரிந்துகொள்....

ஆனால அதற்கும் நளினா அசராமல் போலியாய் பவ்யம் காட்டி கை கட்டியவள், ம்ம்.. சொல்லம்மா..., அப்படி என்னம்மா... உன் நிலை?

ம்ம்... வரிசையாக சொல்கிறேன். தெரிந்துகொள். முதலில் கல்யாணம் இப்போது செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையோ சூழலையோ நான் ஏற்படுத்தவில்லை. இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும் என்ற அபிப்ராயமதான் என்னுடையது. மற்றொன்று....

அதையும்.. சொல்லு... தாயே....

திருமணத்தைப் பற்றியே யோசிக்காத நான் யாரைக்கட்டிக்கொள்வது என்பது பற்றியோ, யாரை செலக்ட் செய்வது என்பது பற்றியோ... எப்படி நினைத்துப் பார்க்க முடியும்? இப்போது உனக்குப் புரிகிறதா?

அவள் சொன்னதற்கு நளினா பலமாய் தலையாட்டியவள், நீ சொல்வது எனக்குப் புரிகிறது. இப்போது நான் சொல்வது உனக்குப் புரிகிறதா என்று பார்.. என்றவள்,

எப்படியும் ஒரு நாள் நீ அப்படி கல்யாண மூடு வந்து யாரையோ கட்டிக்கொள்வது பற்றி யோசிக்கத்தான் போகிறாய்... அப்படி மூடு வந்து முன் பின் தெரியாத யாரையோ கட்டிக் கொள்வதை விட உன்மேல் மயக்கமாயும் கிடக்கிற இந்த மகேந்திரனைக் கட்டிக்கொள்ள உனக்கு ஏன் கசக்கிறது? நன்றாக யோசித்து பதில்சொல்... நந்து....



## 6



நந்தினிக்கே அது எப்படி நடந்தது தான் எப்படி சம்மதித்தோம் என்று தெரியவில்லை. கரைத்தால் கல்லும் கரையும் என்பதற்கேற்ப அவளும் கரைந்து விட்டாள். சம்மதித்து விட்டாள்.

யாரையோ... ஒருவனை மாப்பிள்ளை என்ற பெயரில் எப்படியும் கைப்பிடிக்கப் போகிறாய்... அது... இந்த தெரிந்த மகேந்திரன் என்றால் உனக்கு வசதிதானே? அவனிடம் பணம் இருக்கிறது. உன்னை கண்டு மயங்கி மயங்கி உருகும் இளிச்சவாய்த்தனம் இருக்கிறது. இந்த குவாலிபிகேஷன்

போதாதா நந்தும்மா...? என அக்கா விடாப்பிடியாய் கேட்டது அவளை ரொம்பவும் யோசிக்க வைத்தது.

எல்லாவற்றையும் விட தன்னை இப்படி விழுந்து விழுந்து நேசிப்பவன் ஒருவனை கட்டிக்கொண்டால் வாழ்க்கை நன்றாகத்தானே இருக்கும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றது. அதனாலே ரொம்பவும் யோசிக்காமல் அவளது அழகான தலை மெல்ல அசைந்தது.

அந்த சின்ன தலையாட்டல் நளினாவுக்கு போதாதா? நந்தினி சம்மதித்து விட்டாள். சம்மதித்து விட்டாள்... என கூவாத குறையாய் சொல்லி வீட்டில் உள்ள எல்லோரையும் வேகப்படுத்தி விட்டாள்.

அந்த வேகத்தில் நந்தினி முடிவெடுத்து சம்மதம் சொன்ன விஷயம் ஒரு மணி நேரத்திலே மகேந்திரனின் காதுகளை எட்டி விட்டது. சந்தோஷத்தில் திக்கு முக்காடியவனாய் மறுபடியும் சகோதரியை கூட்டிக்கொண்டு அடித்துப் புரண்டு வந்து விட்டான்.

சம்மதமா? உங்களுக்கு சம்மதம்தானே? என நம்ப முடியாமல் ஒருவித மகிழ்ச்சிப் பரவசத்துடன் கேட்டவனை வியப்பாய்த்தான் பார்த்தாள் நந்தினி. தன் மேல் இவ்வளவு அன்பா இவனுக்கு...? என அதிசயித்தவள் வழக்கமான தனது முத்துப் புன்னகையை அவனை நோக்கி ஸ்நேகமாய் வீசினாள்.

அதில் அடிபட்டு சரணாகதி அடைந்தவன் போல் மகேந்திரனும் கிறக்கமாய் அவளைப் பார்த்தான்.

நளினாவும் நந்தினியும் காதுகளை கடித்தவள், ஆள் நல்ல ஹாண்ட்சம் பர்சனாலிட்டி, இவரைக் கட்டிக்கொள்ள ரொம்பவும் யோசித்தாயே... பார்? என வினவவும் செய்தாள்.

பெரியவர்களை வைத்து கல்யாணப் பேச்சும் ஆரம்பமாயிற்று.

கட்டிய சேலையுடன் வந்தால் போதும். பொன் நகையை விட புன்னகையே போதும் என்றெல்லாம் மாப்பிள்ளை சைடில் இருந்து டயலாக்குகள் பறந்தன. நந்தினியின் குடும்பம் இதை எதிர்பார்த்ததுதான் என்றாலும் தந்தை பிடிவாதமாய், அதெல்லாம் உங்கள் பெருந்தன்மை. நாங்கள் நந்தினிக்கு செய்ய வேண்டியவற்றை சந்தோஷமாய் செய்வோம்... என கறாராய் கூறிவிட்டார்.

அத்தோடு மகேந்திரனின் பணக்கார ஸ்டேட்டஸுக்கு ஏற்ப நகரின் பெரிய திருமண மண்டபம் ஒன்றை புக்செய்தார். ஒரு நாள் மண்டப வாடகை



ஐம்பதாயிரமா? என்ன அநியாயம் இது! ஏனப்பா இப்படி செய்தீர்கள்? என வாய் பிளந்து பூரணியும் நந்தினியும் அதிசயித்து கேள்வி கேட்ட அவர்களை, உங்களுக்குத் தெரியாது. பெரிய இடம் யாருக்கும் எந்த முகச் சுழிப்பும வந்துவிடக்கூடாது என தடிப்போடு போட்டு அடக்கினார்.

கல்யாண முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு கல்யாண வேலைகள் மின்னல் வேகத்தில் நடைபெற ஆரம்பித்தன. ஆயினும் நந்தினி வீட்டாரை ஒரு விஷயம் பெரிதும் வாட்டிற்று.

எந்த விஷயம் பேசுவதாய் இருந்தாலும் சரி மாப்பிள்ளை மகேந்திரன் சைடிலிருந்து அவனது சகோதரி பெண்மணி ஒருத்திதான் ஒற்றையாளாய் நடமாடிக் கொண்டிருந்தாள். ஏன்... வேறு சொந்த பந்தங்கள் கிடையாதா? என ஒரு நாள் அடக்க முடியாமல் வாய் விட்டுக் கேட்டும் விட்டார்கள்.

அதற்கும் சகோதரி பெண்மணியே பதில் கூறினாள். அட... இருக்காமல் இருப்பார்களா? மகேந்திரன் சிறுவயதிலே தாய் தந்தையை இழந்து விட்டாலும் அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி, என ஒரு பெரிய பட்டாளமே இருக்கிறது. ஆனால் அவர்கள் எல்லோரும் எம்.ஆர்.ஐ.என சொல்லப்படும் வெளிநாட்டு வாசிகள், யூ.எஸ்.யூ.கே. ஆஸ்திரேலியா என வெவ்வேறு இடத்தில் இருக்கிறார்கள். கல்யாண சமயம் பாருங்கள். எல்லோரும் வந்து திக்கு முக்காட வைக்கப் போகிறார்கள்...

நந்தினி குடும்பத்தார் பதிலால் திருப்தி அடைந்தாலும், பணமிருப்பதால் சுற்றத்தாரை விலக்கி சண்டைபோட்டு விட்டார்களோ? என்ற சந்தேகம் அவர்களை நெருடிக்கொண்டே இருந்தது.

நந்தினி இது பற்றியெல்லாம் அதிகம் கவலை கொள்ளாவிட்டாலும் அவளுக்கு வேறொரு விஷயம் குடைச்சல கொடுத்துக் கொண்டிருந்தது.

வேறு என்ன? மகேந்திரன்தான் மாப்பிள்ளை என்கிற முறுக்கு கொஞ்சமாவது வேண்டாம்? இன்னும்... பல்லை இளித்துக் கொண்டு தினம் அவள் முன் தோன்றி அசடு வழிந்து கொண்டிருந்தால் அவனைப் பற்றி அவள் என்னதான் நினைப்பாள்? நினைக்கக்கூடும்;? தினம் நேரில், அல்லது போனில் என அவளிடம் பேசுவதை, பேசி அறுப்பதை வாடிக்கையாகவே கொண்டிருந்தான் மகேந்திரன்!

பேச்சு என்றால் அப்படி ஒரு பேச்சு. அட... இப்படியும் ஒருவரால் அறுக்க முடியுமா? என நினைத்து காதை குடையுமளவுக்கு. சுவாரஸ்யமில்லாத. ஒன்றுக்கத்த விஷயங்கள் பெரிதாய் ரசித்து அவன்

சொல்லும்போது.. என்ன இவனது ரசனை? என அவள் பயப்படவே செய்தாள்.

போனில்தான் இப்படியென்றால் நேரில் அதைவிட ஒருபடி மேலாக நடக்கு;.

தனது பெரிய காரை வீட்டு முன்னால் நிறுத்திவிட்டு பவ்யமாய் வந்து கேட்பான். நண்பன் ஒருவனுக்கு பத்திரிகை கொடுக்க வேண்டும். நந்தினி கூட வந்தால் நன்றாக இருக்கும்... என அனுமதி கேட்டு அவளை அழைத்துப் போவான்.

நந்தினியும் ஓரளவு உற்சாகத்துடன் தான் அவனுடன் கிளம்புவாள். அவள் இயல்பாகப் பேசினாலும் அவன் பேச்சில் வழிவதை பார்க்கத்தான் அவளுக்கு எரிச்சலாக இருக்கும். கல்யாணத்திற்குத்தான் சம்மதித்தாயிற்றே. இன்னும் ஏன் இப்படி ஒரு வழிசல்? என அவள் வியக்காமலில்லை.

சில சமயங்களில் நமக்காக இப்படியெல்லாம் ஒருவன் உருகுவானா...? என அதிசயிக்கவும் செய்வாள்

அந்த அதிசயித்திலே கண்ணாடி முன் நின்று தன்னையே கண் கொட்டாமல் அவ்வளவு அழகா நாம்..? என வியந்து பார்த்துக் கொள்வது உண்டு.

ஒரு வழியாய் கல்யாண வேலைகள் மளமளவென்று நடந்து முகூர்த்த நாளை நெருங்கிக் கொண்டிருந்தது; அனுப்ப வேண்டிய இன்விடேஷன், நேரிடையாய் சொல்ல வேண்டிய அழைப்புகள், தூரத்துச் சொந்தங்கள், பால்ய நட்புகள். என ஒவ்வொன்றாய் ஞாபகப்படுததி வேலைகளைச் செய்தார்கள்.

அதுவும் நந்தினியின் ஒன்றுவிட்ட பாட்டி, அத்தை, சின்னம்மா, பெரியம்மா என அனைத்து உறவினர் பட்டாளமும் வந்துவிட வீடே கல்யாணக் களை கட்டி பரபரப்பானது. பெருசுகளின் ஓயாத பேச்சும் சிறு வாண்டுகளின் விளையாட்டு அட்டகாசமுமாய் வீடே மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் போதுதான் இடியாய் அந்த விஷயம் நந்தினியைத் தாக்கியது.

கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்னதாக வழக்கம் போல் அவளை வெளியே அழைத்துச் சென்ற மகேந்திரன் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் வைத்து அவளிடம், நந்தினி இந்தக் கல்யாணம் நடக்காது. நிறுத்தப் போகிறேன்! என்றான் எவ்வித சலனமுமில்லாத குரலில்.





## 7



நந்தினி அவன் சொன்னதைக் கேட்டு அவன் விளையாடுகிறான் என்றுதான் நினைத்தாள். ஆனால் விளையாட்டுக்காகக்கூட இப்படி அபசகுணமாய் பேசக்கூடாது என்பது போல் அவள் சொல்ல வர... என்றுமில்லாததாய் அவன் குரல் கணீரென உயர்ந்து முட்டாளே... என விளித்தபோது..... அப்படியே அதிர்ந்துதான் போனாள்.

அவள் திடுக்கிட திடுக்கிட... ஊசியாய் விஷயத்தை ஏற்றினான் மகேந்திரன். முட்டாளே... உன் அழகில் கிறங்கிப்போய் உன்னை மண முடிக்க வந்த இளிச்சவாயனாகத்தானே என்னை நினைத்துக்கொண்டிருக்கிறாய். முதலில் உன் நினைப்பை மாற்று...!

அதிகாரமாய் கர்ஜனைக் குரலில் திடும்மென அவன் சீறுவதைக் கண்டு நம்ப முடியாமல் கண்களை விரித்து உறுத்துப் பார்த்தாள்.

அவள் பார்த்த அதே மகேந்திரன் தான்! ஆனால் முன்பு பார்த்த அசட்டுத்தனம் இல்லாமல் கம்பீரமாய் நெஞ்சை நிமிர்த்தி கோபாவேசமாய் கண்களை உருட்டிக்கொண்டு... விழிகளா... அவை? முன்பு போல் சாந்தமும் கனிவும் இல்லாமல் கடித்துக் குதறும் புலியின் வெறித்தனத்தோடு.,

என்னவாயிற்று இவனுக்கு...?

திடீரென மூளை குழம்பி விட்டதா... புத்தி பேதலித்து விட்டதா? நிஜமாகவே என்னவோ இவனுக்கு ஆயிற்று... என நம்பியவளாய் நந்தினி எழுந்தவள்.

வாருங்கள் மகேந்திரன். உடனே வீட்டிற்குப் போவோம். கொஞ்சம் ரெஸ்ட் எடுங்கள்... என அவள் அக்கறையாய் பேசி வார்த்தைகளை முடிக்கும் முன்பே அவன் சீறினான்.

முதலில் உன் இருக்கையில் உட்கார்.

தெள்ளத் தெளிவாய் அதட்டும் குரலில் சீறியவன், எனக்கு ஒன்றும் ஆகவில்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன். இனி புத்தி பேதலிக்கப் போவது உனக்குத்தான்....

என்ன சொல்கிறீர்கள் மகேந்திரன்?

வியப்பாய் விழி உயர்த்தியவளின் முகத்தருகே விரல்களால் வேகமாய் சொடுக்கிட்டான்.

இன்னுமா உனக்குப் புரியவில்லை. இவ்வளவு நாள் உன் முன்பு நான் அப்பாவியாய் இளிச்சவாயத்தனமாய் நடந்து கொண்டது வேஷம்! நடிப்பு...! எல்லாம் உன்னை ஏமாற்றத்தான்! பழி வாங்கத்தான்...!

கடகடவென சொல்லிவிட்டு அவன் வெறித்தனமாய் சிரித்தபோது தான் நந்தினிக்கு சுரீரென உரைத்தது.

அவன் விளையாடவில்லை. அவனுக்கு புத்தி பேதலிக்கவில்லை. நிஜம்மாக... நிஜமாகவே தெளிவாய் பேசுகிறான்.

திடும்மென மனதளவில் அதிர்ந்தவளாய் தடுமாறினாள்..

என்ன... சொல்...கிறீர்கள்? நடிப்பா...? இவ்வளவு நாள் என்னுடன் பாகியது நடிப்பா?

அவள் குரல் நடுங்க கேட்க அதற்கு சிறிதும் அதிராமல் ரசித்துச் சிரித்தான் அவன்.

நடிப்பு... பழகியது மட்டுமல்ல. உன்னை காதலித்தது... ஏதோ.. உலக மகா ரதி போல உன் அழகில் ஜொள் விட்டு வழிந்தது. உன்னை கிறக்கமாய் சுற்றி வந்தது.. எல்லாம் எல்லாமே என்னுடைய நடிப்புத்தான்! திட்டமிடப்பட்ட என்னுடைய பிளான்தான்..!

என்ன பிளானா...?

ஆம்... பிளான்தான்..! அந்த நடிப்பு பிளானின் உச்சக் கட்டம் நம் கல்யாணம்...! ஆனால் அதுதான் நடக்கப் போவதில்லையே...!

வெறித்தனமான சிரிப்பை மறுபடியும் உதிர்க்க அதிர்ந்தாள்.

கல்யாணம் நடக்காதா? என்ன சொல்கிறீர்கள்? பத்திரிகை அடித்து... எல்லோருக்கும் கொடுத்து... நாளை ஒரு தினம் கழிந்தால் கல்யாணம்... இப்போது... நடக்காது... என்றால்... எப்படி... எப்படி?

மூச்சு வாங்க அவள் வெகுண்டு கேட்டதற்கு ரொம்ப நேரம் சிரித்து ஓய்ந்தவன் அடக்க முடியாத நகைப்பு தொடர, என்னுடைய பிளானே அதுதானே? இப்படி களை கட்டி வந்து கடைசி நேரத்தில் கல்யாணத்தை நிறுத்தத்தானே... திட்டமிட்டேன்...? இதோ... இன்று அப்படியே செய்யப்போகிறேன்... நான் நினைத்ததை சாதித்து விட்டேன்..! என்றான் பெருமிதமாய்.



அவளுக்கு நிஜமாகவே தலை சுற்றியது. இரு கரங்களாலும் தலையை அழுந்தப் பற்றிக் கொண்டவள் கிலிபடர்ந்த முகமாகவே அவனைப் பார்த்தாள்.

மகேந்திரன், நீங்கள் சொல்வது எல்லாம் நிஜம்மா? இல்லை... என்னிடம் பயம் காட்ட விளையாடுகிறீர்களா? ப்ளீஸ் இனியும் விளையாடாதீர்கள்... சொல்லி விடுங்கள். எனக்கு பயமாய் இருக்கிறது....

அவள் நடுங்க அவன் கைகளை வேகமாய் தட்டினான்.

பேஷ்... இன்னும் என்னை இளிச்ச வாயனாகத்தான் நம்பிக் கொண்டிருக்கிறாயா..? சரியான டியூப் லைட் தான்... நீ..! எங்கே.. கொஞ்சம் என்னை நன்றாக உற்றுப்பார்... என்னை... எனது பர்ஸனாலிட்டியைப் பார்த்தால் உன்னிடம் கிறங்கிப் போய் கிடக்கிற ரகம் மாதிரியாய் இருக்கிறது?

அவன் கேட்டு விட்டு அவளையே உறுத்து நோக்க அப்போதுதான் அவனை பார்ப்பது போல் அதிசயித்துப் பார்த்தாள்.

நல்ல திடமான புஜங்களும் அஜானுபாகுவான உடம்புமாய், நெடிய உயரத்தில் சுருள் முடி பரந்த நெற்றியில் தவழ அவன் நின்று கொண்டிருந்தது பிடறியை உலுக்கியபடி நிற்கும் முரட்டுச் சிங்கத்தின் தோற்றத்தை பிரதிபலித்தது.

உதடுகளில் இறுக்கமான அந்த கடுமைத்தனம். கண்களில் அந்த வெறி...

அவன் சொன்னது உண்மை. இந்தத் தோற்றமும், இந்த கம்பீரமும் நிச்சயமாய் வழிகிற கேஸ் இல்லை. அவன் வழியவுமில்லை!

அவள்தான் ஏமாந்திருக்கிறாள்! அவன் நடித்திருக்கிறான். அவளைக் கண்டு மயங்கி கிறங்குவது போல் நன்றாக நடித்திருக்கிறான். அந்த நடிப்பு கல்யாணம் வரை வந்து விட்டதே...! அதை இவ்வளவு காலமும் உணராமல் அவளும் வெகுளியாய் இருந்திருக்கிறாளே...!

எதற்காக இப்படிச் செய்தான்? எதற்காக இப்படி ஒரு நடிப்பு நடித்தான்?

அவள் திகைத்துப் போய் பார்த்திருக்க... அத்தோடு பேச்சை முடித்துக் கொள்ளப் போகிறவன் போல் எழுந்து கொண்டான்.

அவள் நந்தினியால் இன்னமும் நடப்பதை நம்ப முடியவில்லை.

நிஜம்மாக கல்யாணத்தை நிறுத்தப்போகிறீர்களா?

அவன் தோள்கள் அலட்சியமாய் குலுங்கியது.

நிஜம்மாகத்தான்...! மேலும்... என்றபடி இழுத்தவன் நிறுத்தியபடி தனது இடுங்கிய கண்களால் அவளை ஒரு முறை உற்றுப்பார்த்தான். விழிகள் விரிய கலவரமாய் பார்த்துக் கொண்டிருக்கும் அவளது முகம் ஒருவிதமாக திருப்தியை சந்தோஷத்தை அவனுக்கு ஏற்படுத்தியது.

கல்யாணத்தை அப்படி நிறுத்துவதற்கு ஒரு விசேஷமான காரணத்தையும் சொல்லப் போகிறேன்... என்றான் அழுத்தமான குரலில்.

விசேஷமான காரணமா? என்ன அது...?

அவள் ஆவலாய் கேட்க மறுபடி தலையை சிலுப்பிக்கொண்டு அலட்சியமாய் வெட்டினான். விரைவில் அதை நீயே தெரிந்து கொள்வாய்...! சொல்லிவிட்டு அவளது பதிலுக்கு காத்திராமல் விறுவிறுவென வெளியேறினான் அவன்.

நிறுத்தப்போகிறேன்... என்று சொன்னானே அது உண்மையா...? இல்லை மணப்பெண்ணான அவளை சும்மா விளையாட்டாக பயங்காட்ட... இப்படி ஏதாவது சொல்லி...?

யோசித்தவளுக்கு மகேந்திரனின் பாறைாய் இறுகிய முகமும் கடுகடுப்பான குரலும் அந்த கோபசிவப்பில் ஜொலித்த கண்களும் ஞாபகதிற்கு வந்தது.

நிச்சயம் இது விளையாட்டல்ல... உண்மையாகத்தான் சொல்லியிருக்கிறேன்..!

பாவி! இவ்வளவு விருப்பு பேசினவன் காரணம் ஒன்றையும் சொல்ல மறுக்கிறானே!

என்ன காரணமாக இருக்கும்?

நம்பவைத்து நன்றாக அவளை ஏமாற்றி இவ்வளவு திட்டம் போட்டு செய்கிறவனுக்கு மனதில் வலுவான காரணம் ஒன்று இருக்க வேண்டுமே... என்ன அது?

யோசித்து யோசித்து... குழப்பம்தான் பெருகியது. ஒன்றும் பிடிபடவில்லை!

அவள் இன்னும் விஷயத்தை வீட்டில் யாரிடமும் சொல்லவில்லை. மகேந்திரன் அவளிடம் பேசியதையோ நிறுத்தப் போவதாய்



சொன்னதையோ யாரிடமும் சொல்லவில்லை. சொல்லவும் முடியவில்லை. எப்படிச் சொல்வாள்? என்ன காரணத்தைச் சொல்வாள்? அவன்தான் கடைசிவரை காரணம் எதையும் சொல்லவில்லையே...?

நடப்பது நடக்கட்டும் என்றே தலையைப் பிடித்தபடி இருந்தாள். இயந்திரமாய் நடமாடினாள். பயத்தோடு நேரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் அன்று மாலையே அவள் பயந்த செய்தி இடியான விஷயம் வந்துவிட்டது. மகேந்திரன் தான் சொன்னபடியே செய்து விட்டான்...!

அகம்பாவம் பிடித்து கல்யாணத்தையும் நிறுத்திவிட்டான்!

கல்யாணத்தரகர் ஒருவர் கையில் அந்த மூன்று நான்கு கடிதங்களை கொண்டு தயக்கத்துடன் அவள் வீட்டுக்குள் நுழைந்து தந்தையின் முன் உட்கார்ந்தார்.

தந்தையிடம் கடிதங்களை நீட்டினார்.

அத்தனையும் மொட்டைக் கடிதங்கள்!

எல்லாவற்றிலும் நந்தினியைப் பற்றி அவதூறான வாசகங்களுடன்... அவளுக்கு நிறைய ஆண்களுடன் தொடர்பு இருப்பதாகவும்... நடத்தை சரியில்லாதவள் எனவும்.. குடும்பப்பெண்ணாய் வாழ்க்கை நடத்த தகுதியற்றவள் எனவும்... எழுதப்பட்டிருந்தது.

புரோக்கர் கடிதத்தை வாசித்துக்காட்ட அதற்கு மேல் கேட்கப் பிடிக்காதவளாய் காதுகளை பொத்திக்கொண்டாள் நந்தினி.

அவளுக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

மோகன மகேந்திரன் தான் சொன்னபடியே கல்யாணத்தை நிறுத்தி வழி செய்துவிட்டான். அதுவும் அவளுக்கு நடத்தை கெட்டவள் என்ற அசிங்கமான பட்டத்தை கட்டி

என்ன ஒரு தைரியம் அவனுக்கு...? கூசாமல் இப்படி ஒரு அபாண்டத்தை வேண்டுமென்றே வீசி.. இப்படி ஒரு அவச்சொல் விழுந்தால் அவள் எதிர்கால வாழ்க்கை என்னாகும் என்று நினைத்துப் பார்த்தானா?

சும்மாவே... நடக்க இருந்த கல்யாணம் நின்று போனால்... ஊர் உலகம் கூடி... என்னென்னவோ பேசும். இதில் இவளுக்கு இப்படி ஒரு பட்டம் வேறு கிடைத்து விட்டால்....? மெல்லுகிற வாய்களுக்கு அவலும் அரிசிச் சோறும் போட்டது போல் அல்லவா ஆகிவிடும்...?

அவள் மட்டுமா...?

வீட்டில்...? அப்பா.. அம்மா.. அக்கா... அத்தான்... என எல்லோரும் விஷயத்தைக் கேட்டு திகைத்து...ஸ்தம்பித்து..?

நம் நந்தினிக்குட்டிக்கா இப்படி ஒரு அவப்பெயர்? என அம்மா தாங்க முடியாமல் அழ ஆரம்பித்து விட்டாள்.

தைரியமாக நின்றவர் அப்பா ஒருவர்தான்!

விஷயத்தைச் சொன்ன அந்த கல்யாணத்தரகரிடம், கல்யாணத்தை நிறுத்தியதற்கு ரொம்பவும் சந்தோஷம் வெறும் மொட்டைக் கடிதங்களை நம்பும் இது போன்ற முதுகெலும்பில்லாத மனிதர்களின் சம்பந்தம் நமக்குத் தேவையில்லை. நிறுத்தியதில் சந்தோஷமே... என்று போய் அவர்களிடம் சொல்லிவிடுங்கள்.. என்று கூறி அவரை அனுப்பிவிட்டார்.

பின் எல்லோரிடமும், யாரும் கவலைப்படக்கூடாது. நல்லவேளை முன்பே இப்படி எளிதில் சந்தேகப்படும் மாப்பிள்ளை வீட்டாரின் குணம் தெரிந்தது என்று மகிழ்ச்சியடையுங்கள். நம் நந்தினிக்குட்டிக்கு நிச்சயம் இதை விட நல்ல இடம் வரத்தான் போகிறது. பாருங்கள்! என்றார் உறுதி பொங்கும் குரலில்

நந்தினியிடமும் தனியே வந்து தலையைப் பரிவாய் தடவிய சிவராமன், நந்தும்மா... நீயும் நடந்ததற்காக கவலைப்படுதல் கூடாது. தப்பு நம் மீது சிறிதளவும் இல்லை என்பது தெரியும். இல்லா ஒரு பழிக்கு வீணாய் மறுகுதல் கூடாது.. என்றவர் என்ன... எங்களைவிட உனக்குத்தான் எங்கு சென்றாலும் என்ன...? எதற்கு? என கேள்விகளால் துளைத்து துன்புறுத்தல் இருக்கும்... எல்லாம் மிஞ்சிப் போனால் ஒரு மாதம்... பதில்சொல்லி விட்டால்... எல்லோரும் மறந்து போய் விடுவார்கள்... என்ன.. நீ... தைரியமாய்இருப்பாய்தானே?

பீறிட்டுக் கிளம்பிய சோகத்தை வருத்தத்தை எல்லாம் உள்ளுக்குள்ளே அடக்கிக் கொண்டு குரல் நடுங்கதந்தை கேட்டபோது ஒரு கணம் ஆடித்தான் போனாள்... நந்தினி

ஐயோ...! எனக்கு எவ்விதமான வருத்தமும் இல்லை. நீங்கள் தைரியமாக இருங்கள் அப்பா...! என்றாள் அவர் கைகளை இறுகப்பிடித்துக்கொண்டு.



அதற்குப் பின் வந்த ஒரு வாரம் அவர்கள் நினைத்தது போல் நரகமாய்த்தான் இருந்தது.

கல்யாண மண்டபத்தையும் புக் செய்ததில் இருந்து சமையல் ஏற்பாடு மணப்பந்தல், மாலை அலங்காரம், விளக்கொளிகள், இன்னிசை, வீடியோகிராபி என சகல விஷயங்களையும் கான்சல் செய்வதற்குள் போதும் போதும் என்றாயிற்று.

வருமானம் போய்விட்ட கோபத்தில் பலருடைய முகச்சுழிப்புகள், ஆயிரத்தியெட்டு கேள்விகள், தேவையில்லாத விசாரிப்புகள் என எல்லாவற்றையும் அவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று.

சங்கடத்துடன் பதில் சொன்னார்கள். சமாளித்தார்கள். ஆனாலும் எல்லோருக்கும் மனது வலித்து ரணகளமாகிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்!

அதிலும் ரொம்பவும் காயப்பட்டவள் நந்தினிதான்! அழக்கூடாது.... என்று பிடிவாதமாய்ட இருந்தாலும் அவ்வப்போது அவளை மீறி கண்ணீர்த்துளிகள் எட்டிப்பார்த்தது. எதையும் வெளிக்காட்டாமல் உணர்ச்சியில்லாமல் இடித்த புளி போல்தான் அந்த ஒருவாரமும் இருந்தாள்.

தந்தை சிவராமன், அப்படி யாரம்மா உன்னை பிடிக்காமல் இப்படிொரு மொட்டைக் கடிதத்தை எழுதிப் போட்டிருக்கிறார்கள்? என்று கேட்டபோது கூட, எனக்கும் தெரியவில்லையே அப்பா! என்று தான் உரைத்தாள்.

ஆனால் உள்ளுக்குள் எல்லாம் அந்த விஷமக்கார மகேந்திரன் வேலை. அவனை ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்! என கறுவிக் கருவிக் கொண்டாள்.



## 8



நடந்த சம்பவங்களால் ஒரு பத்து நாட்கள் வெளியே தலைக்காட்ட கூடாது... என்றுதான் நந்தினி நினைத்திடிருந்தாள். ஆனால் அதிகபட்சம் மூன்று நாட்களுக்கு மேல் அவளால் வீட்டில் அடைந்து கிடக்க முடியவில்லை.

சும்மாவாக முழங்காலிட்டு அமர்ந்து கொண்டு, சுவரையே வெறித்துக்கொண்டு நடந்ததை நினைத்து வருந்தியெல்லாம் அவளால் பொழுதை ஓட்ட முடியவில்லை.

அப்படி என்னதான் நேர்ந்து விட்டது எனக்கு? என்றுநான் எதிர்க்கேள்வி கேட்டுக் கொண்டாள் அப்படி இழக்கக்கூடாத ஒன்றையும் அவள் இழந்துவிடவில்லையே...! என்ன நடக்க இருந்த கல்யாணம் நின்று போய் விட்டது. அவ்வளவுதானே?

இதற்கு ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்?

மேலும் தப்பு சிறிதளவேனும் அவள் பேரில் இல்லையே...! அந்த மோகன மகேந்திரன்தான் எல்லாவறறுக்குமான சூத்ரதாரி அவன்தான் மோசமானவன். கெட்டவன். எதையோ மனதில் வைத்துக்கொண்டு... பெரிய பழி தீர்ப்பது போல் அவள் வாழ்க்கையில் விளையாடிவிட்டான்.....

விடக்கூடாது.. அவனை...! அதுவும் எவ்வளவு பெரிய அவப்பெயர்.. என்ன ஒரு தலைகுனிவு...? மொத்தக்குடும்பத்திற்கே அல்லவா அவமானம்? எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல்.. அவளுக்கு நடத்தை சரியில்லாதவள் என்ற பட்டம் வேறு...?

இவ்வளவு செய்திருக்கிறானே... காரணத்தைச் சொல்லத் தெரிகிறதா.. அந்தக் கோழைக்கு?

யோசித்தவள் வீறாப்பாய் நிமிர்ந்து கொண்டாள்.

முதலில் இப்படி முடங்கிக் கிடப்பதை விட்டு விட்டு சுறுசுறுப்பாகி இயல்பு வாழ்க்கைக்கு வர வேண்டும் என நினைத்தவள், தோழி ஒருத்திமூலம் அவள் வேலை பார்க்கும் ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் அன்றே வேலைக்குச் சேர்ந்தாள்.

சற்று குறைந்த சம்பளம் ஆனாலும் அந்தச் சூழ்நிலையில் தெரிவது வேலையில் இருந்தால்தான் மனதை இயல்பு நிலைக்கு திருப்ப முடியும் என்பதால் உடனே ஒத்துக்கொண்டாள்.

அவள் நினைத்தது போலவே இரண்டு மூன்று நாள் வேலைக்குச் சென்று வந்ததும் மனம் குழப்பம் தீர்ந்ததுபோல் லேசாகியிருந்தது. நாலாவது நாள் அலுவலகத்தில் ஒன் ஹவர் பர்மிஷன் போட்டு விட்டு வீரமாய் கிளம்பிவிட்டாள்.

அந்த விஷமக்கார மகேந்திரனை இன்று ஒன்றில் இரண்டு பார்த்து விட வேண்டும்!



அலுவலகத்தை விட்டு வெளிவந்து ஒரு அடி எடுத்து வைத்தவள் சட்டென நின்றாள்.

மனதில் சிந்தனை வலுப்பெற்றது. அவசரப்படக் கூடாது. கவனமாக கையாள வேண்டும். மோகன மகேந்திரன் ஒன்றும் சாதாரண ஆள் இல்லை. பெரும் விஷமக்காரன் கை தேர்ந்த கிரிமினல்!

அவன் அலுவலகத்தில் போய் காச்மூச்சென கத்தினால் எல்லாம் ஒன்றும் எடுபடாது. நாயை விரட்டுவது போல் விரட்டு விடுவான்.

இப்போது நமக்கு முக்கியம் காரணம் அவனை என்ன காரணத்திற்காக இப்படி நம் வாழ்க்கையில் விளையாடினான் என்பதை கண்டு பிடித்தாகவேண்டும் அதற்கு... வழி..?

யோசித்தவளுக்கு பட்டென அது பிரகாசமாய் உதித்தது.

அலுவலகத்திடிற்குச் சென்றால் எதுவும் நடக்காது. பணியாளர்களை விட்டே கூட அவளை விரட்டிவிடுவான் ஆனால் வீடு... அவனது பங்களா.. அங்கு போனால்...? கண்டிப்பாய் அங்கு பெண்கள் பெரியவர்கள் என சிலர் இருக்கக்கூடும். அதனால் அசால்டாக அவளை அவமானப்படுத்தி ஆனந்தப்படும் வேலையை அவனால் செய்ய முடியாதே? பேச வேண்டியதை பேசித்தான் ஆக வேணடும்.... சொல்ல வேண்டியதை சொல்லித்தான் ஆக வேண்டும்...! நினைத்தவள் அதுதான் சரியான முடிவெடுத்து கிளம்பினாள்.

அவன் மகேந்திரனின் பங்களா விலாசம் விஷயம் கல்யாணம் வரை போயிருந்ததால் மனப்பாடமாய் கூட ஆகியிருந்தது. ஞாபகப்படுத்திக்கொண்டு ஆட்டோ பிடித்து ஏறினாள்.

அரை மணி நேரத்தில் அமைதியான லயன்ஸ்டவுன் பகுதியில் ஆட்டோ நின்றது.

அந்தக் காலனி முழுவதும் பெரிய பெரிய பங்களாக்கள். பணக்கார வாசனைகள்...! பெரிய பெரிய குல்மொஹர் மரங்களுக்கிடையே மகேந்திரனின் பங்களா கிரானைட் பளபளப்பில் கம்பீரமாகத்தெரிந்தது.

பெரிய க்ரில் கேட்டின் பக்கத்தில் நெருங்குகையில்.. ஒரு கணம்.... இது... இங்கு அவள் மாலை சூடி... மேளதாளத்துடன் நுழைந்திருக்க வேண்டிய இடம் அல்லவா? என்ற எண்ணம் பீறிட்டுக் கிளம்பியது.

ஆனால் அவள் ஒன்றும் இந்த பகட்டுக்கு பணக்காரத்தனத்திற்கு ஆசைப்படவில்லையே..! அவன் அல்லவா பின்னாலே வந்து அவளை மயக்க

ஆசை காட்டினான்? எவ்வளவு பெரிய மோசக்காரன் அவன்? என மனதுள் கறுவியபடி கேட்டை நெருங்கியவள் முன் விரைப்பான செக்கியூரிட்டி தோன்றினான்.

ஒரு கணம் செக்கியூரிட்டியை பற்றி யோசிக்காததால் முளித்தாள்.

மறுகணமே, முக்கியமான உறவினர் மகேந்திரன் அவர்களை பார்க்க வந்திருக்கிறேன்... என்றாள் சார்... மோர்களை தவிர்த்து, மகேந்திரனை நெருங்கியவன் போல் காட்டிக்கொண்டு

ஓரளவு முறைத்த செக்கியூரிட்டி கூட அவள் சொன்ன பதிலால் பார்வையை தணித்துக்கொண்டு கதவுகளைத் மெல்ல திறந்து விட்டான்.

அப்பாடா! நல்ல ஐடியாதான்! என்றபடி வேகமாய் அவள் கால்களை பதித்து நடப்பதற்குள் தன் பக்கம் உள்ள இன்டர்காமின் மூலம் உள்ளே விஷயத்தைச் சொல்லவும் ஆரம்பித்து விட்டான் செக்கியூரிட்டி பாவி! ஒரு இரண்டு நிமிடம் கழித்து அவள் உள்ளே நுழைந்த பின் பண்ணக்கூடாதா? அதற்குள் சொல்லித் தொலைக்கிறானே? என எரிச்சலுடனே விறுவிறு நடைபோட்டு பங்களாவின் முகப்பு ரூமை நெருங்கினாள் நந்தினி.

அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

முன் ஹால் சோபாவிலேயே கால் மேல் கால் போட்டபடி சிங்கம் போல் உட்கார்ந்திருந்தான் அவன்

மோகன மகேந்திரன்!

பேப்பரை புரட்டிக் கொண்டிருந்தவன் அரவம் கேட்டு நிமிர்ந்தான்.

சாதாரணமாய் பார்த்த அவனது கண்கள் அவளைப் பார்த்ததும் கோபமாய் ஜொலிக்கும் விழிகளாய் மாறுவது கண்கூடாகத் தெரிந்தது.

பிடறியை சிலிர்த்துக்கொண்டு கர்ஜிக்க எழும் சிங்கம் போலவே எழுந்துகொண்டான். ஒரு கணம் அவனது கம்பீரமான தோற்றத்தையும் கோபத்தையும் கண்டவள் இந்த முகமா நம்மைச் சுற்றி சுற்றி அசடு வழிய வந்தது...? என பழைய விஷயங்களை நினைத்து அதிரவும் செய்தாள்.

எங்கு வந்தாய் நீ...?

ஏறக்குறைய புலியின் உறுமலாகவே அவனிடமிருந்து வார்த்தைகள் தெறித்து வந்தது.

ம்ஹூம்! அவளும் சிலிர்த்தாள்.



அவள் அல்லவா கோபப்படவேண்டும்? நிமிர்ந்து எரிப்பது போல் அவனை முறைத்தாள். மிஸ்டர்... நீ... நீ... ஒரு கோழை...! பேடி..!... த்தூ..! எவ்வளவு அசிங்கமாய் நடந்திருக்கிறாய்? ஒரு மொட்டைக் கடிதம் தயார்த்து கல்யாணத்தை நிறுத்தி.... ... நிஜமாகவே... சொல்கிறேன்... நீ... கோழை.. கோழையேதான்...!

அவள் வார்த்தைகளை முடிக்கும் முன் டக்கென விரல்களை அவள் முகத்தின் பக்கம் சுண்டி சொடுக்கிட்டவன், ம்ம்... மரியாதை..? என்றான் கைகளால் எச்சரிப்பது போல்

நந்தினி அதற்கு பயப்படவில்லை, ஆனாலும் தனது பண்பாடு உணர்ந்து கொள்பவள் கொண்டவள் போல், பிறகு என்ன மிஸ்டர்? நீங்கள் செய்திருக்கிற காரியத்திற்கு வெற்றிலை பாக்கு வைத்தா மரியாதை கொடுக்க முடியும்? என சீறியவள் அதே வேகத்திடில் அவனைக் குட்டவும் செய்தாள்.

ஒரு படித்த முட்டாள் போல் அல்லவா நடந் கீழ்த்தரமாக நடந்திருக்கிறீர்கள்? ஒரு பெரிய கம்பெனி முதலாளி தொழிலதிபர் என சொல்லிக் கொள்ளும் ஒருவர் செய்கிற காரியமா இது? வடிகட்டி முட்டாள்த்தனம்...! கேவலமான செயல்... த்தூ...!

சிவந்த அவளது முகத்தையும் மூச்சு வாங்கப் பேசும் அவளது ஆவேசத்தையும் கண்டவன் சட்டென குளிர்ந்தவன் போல் புன்னகைக்கு மாறினான்.

என்ன திட்டுகிறாயா? நன்றாகத் திட்டு... கோபம் ஆவேசம் ஆத்திரம்... எல்லாம் வருகிறதா? கொதித்துப் போய் உடம்பெல்லாம் துடிக்கிறதா...? அப்படித் துடிக்கட்டும்... நன்றாகத்துடிக்கட்டும்... இதற்காகத்தான் ஆசைப்பட்டேன்.

விஷமமாய் செய்றேன்.. இப்போது கண்குளிரப் பாரக்கிறேன்... எல்லாம் என் திட்டப்படியே நடந்திருக்கிறது சபாஷ்....!

உற்சாகமாகி தன் கைகளையும் வேகமாய் தட்டினான் அவன்.

அவளும் உஷ்ணம் கூடியது. உங்களுக்கு வெட்கமாயில்லை...? கேவலமாய் கீழ்த்தரமாய் ஒரு காரியத்தைச் செய்து விட்டு... அதற்கு தலைகுனியாமல்... நிமிர்ந்து உங்களையே பாராட்டிக்கொண்டு.. சே..! என்ன ஒரு மோசமான மனிதர் நீங்கள்....

அவள் முடிக்கும் முன்பே, உன்னை சரியாய் பழி வாங்கிய ஒரு மோசமான மனிதன். அப்படியே வைத்துக்கொள் போதுமா? என்றான்.

எதற்காக என்னைப் பழி வாங்க வேண்டும்?

எல்லாம் ஒரு காரணமாகத்தான்...! என்றான் அவன் அசால்டாய் ஒருவித பீடிகையுடன்.

அது... தான் ... என்ன காரணம் தைரியமிருந்தால் அதை என்னிடம் சொல்லுங்கள்.... பார்ப்போம்...!

அவன் தோள்களை விரைப்பாய் குலுக்கியவன், ம்ஹூம்! உன்னிடம் சொல்ல எனக்கென்ன பயம்? காரணத்தை சொல்ல வேண்டிய நேரமும் வந்து விட்டது.... என்றபடி தன் விரல்களை சுண்டி பக்கவாட்டில் மாலையுடன் தொங்கிக்கொண்டிருந்த ஒரு புகைப்படத்தைக் காட்டினான்.

அதைத் திரும்பிப் பார்த்த நந்தினி அப்படியே அதிர்ச்சியானாள்!



# 9



அந்த புகைப்படத்தை விரல் நடுங்க வாங்கிய நந்தினி அதல் தெரிந்த உருவத்தைப் பார்த்து அப்படியே அதிர்ந்தாள்.

இது... இது... கிரி... கிரி.. கிரிதர்தானே...?

தன்னையறியாமல் வார்த்தைகளை உச்சரிக்க, ஆம்... அதே கிரிதர்தான்! என் அண்ணன்! என முடித்து வைத்தான் அவன் இறுக்கத்தோடு.

என்ன கிரிதர் உங்கள் அண்ணனா?

அவள் வியப்பு மேலிட கூச்சலிட அவன் நிதானமாய் அவளை உறுத்துப் பார்த்தான்.

சொந்த.. உடன் பிறந்த அண்ணன்! நன்றாக உற்றுப்பார்... அவரது முகச் சாயல் என் முகத்தில் தெரியவில்லை?

நந்தினி அப்போதுதான் அதை கவனித்தாள். அவன் சொல்வது உண்மை. கிரிதரின் முகச் சாயல் ஏறக்குறைய அவனுக்கும் இருக்கிறதே! இதை எப்படி அவள் கவனிக் மறந்தாள்?



அவளுக்கு இப்போது மெல்ல புரிய ஆரம்பித்தது. அவனது கோபம், ஆத்திரம்... நடிப்பு... பாசாங்கு... என எல்லாவற்றுக்கும் மூலமான விஷயம் காரணம் புரிந்து விட்டது.

கிரிதர் அவள் குடும்பத்தால் பாதிக்கப்பட்டவன். அதற்கு பழிவாங்க இப்படியொரு திட்டம் போட்டு வந்திருக்கிறான். என்ன ஒரு வஞ்சம்!

அப்படியானால்... அப்படியானால்... எங்கள் குடும்பத்தை பழி வாங்க அவமானப்படுத்த இப்படிச் செய்திருக்கிறீர்கள்..?

அவள் துடித்துக் கேட்க அவன் அமைதியாய் மூச்சிழுத்தான்.

அப்பாடா..! உன் ட்யூப்லைட் மூளைக்கு இப்பவாவது புரிந்ததே...!

அது அநியாயம்...! தரம் கெட்ட செயல்..!

அவன் சிரித்தான்.

நான் செய்ததா...? இல்லை... என் அண்ணனுக்கு நீங்கள் செய்ததா... எது தரம் கெட்ட செயல்...?

நாங்கள் செய்ததில் நியாயம் இருக்கிறது. உங்கள் அண்ணனுடைய பழக்க வழக்கங்கள் அப்படியொரு முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிற்று...

அவன் நிமிர்ந்து அவளையே முறைத்துப் பாரத்தபடி கைகளைக் கட்டினான்.

முடிவெடுத்தோம்... என்று லேசாக சொல்கிறாயே... அப்படி ஒரு முடிவு எடுத்ததால் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?

அப்படி என்ன நடந்தது?

என் அண்ணன் கிரிதர் அதனால் தன் வாழ்க்கையையே முடித்துக் கொண்டான்.... பெரும் சோகப் பெருமூச்சுடன் அவன் சொல்ல அவள் பயங்கரமாய் திடுக்கிட்டாள்.

என்ன... என்ன... சொல்கிறீர்கள்? வாழ்வை முடித்துக் கொண்டாரா?

ஆம். அதுவும் தற்கொலை...!

அவன் உச்சரிக்க.. உச்சரிக்க... நந்தினி அதிர்ந்துதான் போனாள்.

அவள் வீட்டில் எடுத்த முடிவு... தற்கொலை பண்ணுமளவுக்கு கிரிதரை பாதித்து விட்டதா?

இது பற்றி துளியளவும் அவள் குடும்பத்திற்குத் தெரியாமல் போயிற்றே?

அவள் திகைப்பை அறிந்தவன் போல் அவன் வார்த்தைகளை வீசினான்.

கிரிதர்... அவ்வளவு தூரம்... உன் அக்கா நளினாவை விரும்பியிருக்கிறான். நேசித்திருக்கிறான். அது புரியாமல் நீங்கள் எடுத்தெறிந்து வீசி இருக்கிறீர்கள். இப்போது புரிகிறதா?

அவன் மறுபடியும் சொடுக்கிட்டு கேட்க அவள் மெல்ல தலையை ஆட்டினாள்.

அவளுக்கு அவனது ஆத்திரம் புரிந்தது. அதில் நியாயம் இருப்பதாய்க் கூட தோன்றியது. சொந்த அண்ணனின் உயர் போகுமளவவுக்கு விஷயம் போய் விட்டதால் இந்த ஆத்திடிரம்... இந்த பழிவாங்கும் உணர்ச்சி....

அவன் தன் பக்க காரணத்தைச் சொல்லிவிட்டான்.

ஆனால்... அவள் பக்கமும் நியாயம் இருக்கிறதே! அவள் குடும்பம் ஒன்று பொய்யைச் சொல்லவில்லையே... உண்மையைத்தானே சொன்னார்கள்...? அந்த உண்மை கிரிதரை சுட்டு அவன் இப்படிச் செய்து கொண்டால் அவர்களா பொறுப்பு? நினைத்தவள் நடந்த விஷயங்களை ஒருமுறை சிந்தித்துப் பார்த்தாள்.

இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது. நளினாவை கிரிதருக்கு மணமுடிக்க ஒரு கல்யாண புரோக்கர் மூலம் பேச்சு ஆரம்பமாயிருந்தது. பெண் பார்த்து பிடித்துப் போய் மாப்பிள்ளையை பார்க்க அழைப்பு விடுத்தார்கள். கிரிதர் சொந்தமாக ஷிப்பிங் நிறுவனம் ஒன்று வைத்து நல்ல வசதியில் இருக்க... நந்தினி குடும்பத்தாருக்கு அவனைப் பிடித்துப் போய் உடனே கல்யாணத்திடிற்கு ஓ.கே. சொல்லிவிட்டார்கள்.

முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு மண்டபம் புக் செய்து... இன்விடேஷன் அடித்து.. கல்யாண வேலைகள் மளமளவென்று நடந்து கொண்டிருக்க... அந்த சமயத்திடில் அந்தச் செய்தி நந்தினி குடும்பத்தாரின் காதுகளை எட்டியது.



மாப்பிள்ளை கிரிதருக்கு குடிப்பழக்கம் உண்டு. தினம் அரவானால் அவனால் மது அருந்தாமல் இரக்க முடியாது என்று ஆதாரத்துடன் ஒரு நண்பர் மூலம் விஷயம் வெளிப்பட்டு விட்டது. எல்லோரும் என்ன செய்வது... என்று திகைக்க.. நளினா ஒரே போடாய் போட்டு விட்டாள்.

ஒரு குடிகாரருக்கு மனைவியாய் என்னால் வாழ்க்கைப் பட முடியாது. உடனே கல்யாணத்தை நிறுத்துங்கள்... என்று அப்பா அம்மாவுக்கும் வேறு வழி தெரியவில்லை. மணப்பெண் இவ்வளவு உறுதியாய் இருக்கும் போது அவர்களால் என்ன செய்யமுடியும்?

வேறு வழி தோன்றாதவர்களாய் கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு நாளே இருக்கும் சமயத்தில் மாப்பிள்ளை வீட்டாரிடம் பக்குவமாய் சொல்லி தடாலடியாய் கல்யாணத்தை நிறுததினார்கள்.

இதனால் பெரிய அவமானம்தான்... கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத தலை குனிவுதான். கிரிதருக்கு மட்டுமல்ல. அவள் வீட்டாருக்கும் தானே? எத்தனை கேள்விகள். எத்தனை விசாரிப்புகள். எல்லாவற்றுக்கும் மழுப்பி மழுப்பி பேசி சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாயிற்றே!

ஆக.. பாதிப்பு அவனுக்கு மட்டுமல்ல. அவர்கள் வீட்டாருக்கும்தானே!

என்ன... கிரிதர் இப்படிச் செய்வான் என யாரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள்... யாராவது இப்படி ஒரு முடிவை கிரிதர் எடுக்கப் போவதை உணர்ந்து தடுத்திருக்கலாம் தானே?

அதையே அவள் கேள்வியாய் கேட்டபோது அவன் சீறினான்.

எப்படி... எப்படி தடுக்க முடியும்? நீங்கள் கல்யாணத்தை நிறுத்திய விஷயம் தெரிந்ததுமே தனது குடிப்பழக்கத்தினால்தான் இப்படி ஆகிவிட்டது என்பதை நொடியில் புரிந்து கொண்டான்.

இதில் நளினாவின் போட்டோவை வேறு நீங்கள் கொடுத்திருந்தது.. அவள்தான் தனக்கு மனைவியாய் வரப் போகிறவள் என பல கலர் கனவுகளை எதிர்காலத்திட்டங்கடைள அவனை எண்ணச் செய்திருந்தது.

அப்படி அவன் எண்ணிய விஷயங்கள் யாவுதட ஒரே நொடியில் தூள் தூளாகிப்போனதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. யாரிடமும் சொல்லாமல் கொள்ளமல் உடனே கதவை தாளிட்டு தூக்கு மாட்டிக்கொண்டான். எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எங்கள்

கண் முன்னாலே எல்லாம் நடந்து விட்டது. எவ்வளவு பெரிய அதிர்ச்சி தெரியுமா?

அவன் மூச்சு வாங்கப் பேசிவிட்டு ஓரிரு நிமிடங்கள் நீளமாய் மூச்சிழுத்து தன்னை ஆசுவாசப்படுத்தினான்.

கொஞ்ச நேரம் பேசாமல் அவளும் அவனையே வெறித்தவள் மெல்ல கேட்டாள்.

இதில் நாங்கள் என்ன தப்பு செய்தோம்? உண்மையை... உங்கள் அண்ணனுக்கு இருந்த குடிப் பழக்கத்தைச் சொன்னது தப்பு என்கிறீர்களா?

அது தப்பு இல்லை. விஷயத்தை பட்டென உடைத்துச் சொன்னதுதான் தவறு. பக்குவமாய் சொல்லியிருக்கவேண்டும். அதை விட்டு விட்டு ஒரு குடிகாரன் என கேவலப்படுத்தி அவன் மனம் நோகடையச் செய்து அவன் தற்கொலைக்குக் காரணமாகி விட்டீர்கள்... அது... அது... மன்னிக்க முடியாத குற்றம்...!

அவர்... கிரிதர் உயிரைப் போக்கிக் கொள்ளுமளவுக்கு போய் விடுவார் என்று நாங்கள் நினைக்கவில்லை.

நாங்களும் நினைக்கவில்லையே... ஆனால் அப்படி நடந்து விட்டதே...!' விட்டேற்றியாய் கைகளை வீசிச்சொன்னபடி அவன் முறைக்க ஆரம்பிக்க... அவளும் தைரியம் கொண்டவள் போல் நிமிர்ந்து பார்த்தாள்.

சரி.. இப்போது... அதற்காக பழி வாங்கி இருக்கிறீர்களா?

அவன் பதில் சொல்லாமல் தலையை மட்டும் வேகமாய் அசைத்து சிரிக்க ஆரம்பித்தான்.



## 10



நந்தினி வீட்டிற்கு வந்தவள்தன் ரூமிற்குச் சென்று தலையைப் பிடித்தபடி உட்கார்ந்து விட்டாள். யாரிடமும் மகேந்திரன் சொன்ன பழிவாங்கல் விஷயத்தைச் சொல்லவில்லை.

இப்படி ஒரு பயங்கரமான காரணம் பின்னணியாய் இருக்கும் என அவள் கூட கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லைதான். ஏதோ இந்த மகேந்திரன் தன்னுடைய பணக்காரத்தனத்தால் கிறுக்குத்தனமாய் அவள்



வாழ்க்கையுடன் விளையாடுகிறான் என்றுதான் நினைத்திருந்தாள் ஆனால் நிஜமாகவே... அவள் குடும்பம் செய்த ஒரு காரியத்திற்காக அவளைத் தேர்ந்தெடுத்து பழிவாங்கியிருக்கிறான்...

அதுவும் வெகு ஜாக்கிரதையாக... தான் யார் என்பதை அறிந்து கொள்ள முடியாமல் விஷயங்களை மறைத்து.. காய்களை நகர்த்தி அவளை சரியாய் கல்யாண வலையில் விழ வைத்து பழிவாங்கியிருக்கிறான்!

என்ன ஒரு அசிங்கமான திட்டம்! அவள் தற்செயலாய் அப்ளிகேஷன் போட்டு அவன் கம்பெனிக்கே இன்டர்வியூவிற்குப் போக.. அகப்பட்டது புள்ளிமான்.. என்பது போல் படபடவென அவளைச் சுற்றி வலையைப் பின்னி விட்டான் அவன். அவளைப் பார்த்து காதல் கொண்டு ஜொள் விடுவதாய் நடிப்பு வேறு... பின் யாரோ ஒரு பெண்மணியை அக்கா என்ற பெயரில் செட்டப் செய்து வீட்டிற்கு வந்து முறைப்படி அவளை பெண் கேட்டு நாடகம் ஆடி... அவன் நினைத்தது போல் அவளும் வலையில் விழுந்து கல்யாணத்திற்கு ஒத்துக்கொள்ளவும் செய்து விட்டாளே!

அதுதான் அவள் செய்த மடத்தனமான காரியம்!

நந்தினியும் வேண்டாம் இந்த இளிச்சவாயன் ஜொள் மன்னன் என்று பிடிவாதமாய்த்தான் இருந்தாள். ஆனால் எல்லோரும் வற்புறுத்தி அதுஇதுவென சொலலி சமமதிக்க வைத்து விட்டார்களே!

அதிலும இந்த அக்கா நளினா... ஒரே போடாக, பணக்கார இடம் பேசாமல் தலையை நீட்டு என்றல்லவா பிடிவாதம் பிடித்து அவளை சம்மதிக்க வைத்தாள். பாவம் அவள்ள அவள் நிராகரித்த ஒரு வரனுக்கான பழிவாங்கல்தான் இந்தக் கல்யாண நாடகம் என்பது எப்படி அவளுக்கு தெரியும்?

அப்பா கூட இந்த மகேந்திரன் பெரிய பிசினஸ்மேன், ஜென்டில்மேன் என்றெல்லாம் புகழ்ந்து கொண்டிருந்தாரே... இவன் இப்படி கல்யாணத்தை நிறுத்தி கரியைப் பூசுவான் என அவர் கொஞ்சமும நினைத்திருப்பாரா?

எல்லாவற்றையும் விட மோசமான மகேந்திரன் செய்த கேவலமான மன்னிக்க முடியாத விஷயம் அவள் மீது சேற்றை அள்ளி வீசியதுதான். அவனே மொட்டைக் கடிதங்களை கூசாமல் எழுதி அதேயே காரணம் காட்டி கல்யாணத்தை நிறுத்தி.. அவள் நடத்தை சரியில்லாதவள் போல் ஒரு பட்டத்தை ஒரு பிரமையை உண்டாக்கி விட்டானே!

சொல்லப்போனால் இந்தப் பழியை மற்றவர்கள் நம்புகிறார்களோ... இல்லையோ.. நமக்கு எதற்கு வம்பு என்று ஒதுங்கிப்போக ஆரம்பித்து விடுவார்களே! நதாளை அவளுக்கென்று ஒரு வரன் அமைவது. அப்படியே அமைந்தாலும் அவர்கள் இந்த விஷயத்தை கேள்விப்பட்டால் என்ன மாதிரி நினைப்பார்கள்? ஒரு வேளை அவர்களும் சந்தேகம் கொண்டு குழம்பிவிட்டால்... பின் அவள் வாழ்க்கை என்னாவது?

அவளுக்கு வரன் அமைவது எதிர்காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கை அமைவது எல்லாம் பெரிய கேள்விக்குறியாய் ஆகிவிடுமே!

இந்த மகேந்திரன் திட்டம்போட்டு என்ன ஒரு காரியத்தைச் செய்திருக்கிறான். எவ்வளவு பெரிய இடியை அவள் தலையில் இறக்கியிருக்கிறான்? அவள் மொத்த வாழ்க்கை முழுவதையும் சிதைத்து சின்னா பின்ன மாக்குவது அலலவா அவனது திட்டம்?

அந்த நயவஞ்சகக்காரனை, அவளுக்கு இவ்வளவு பெரிய தலைகுனிவு ஏற்படுத்தியவனை சும்மா வீடுவதாவது?

எதாவது செய்தாக வேண்டும்!

அடியை வாங்கிக் கொண்டு பயந்து ஓடும் கோழைத்தனம் எல்லாம் அவளுக்குப் பிடிக்காத சகித்துக் கொள்ள முடியாத ஒன்று!

அதனால் பதிலடி கொடுக்கவேண்டும்.

தனக்கு ஏற்பட்டது போல் அவனுக்கும் திகைப்பான பாதிப்பு அதிர்ச்சியான தலைகுனிவு!

எப்படி அதைக் கொண்டு வர?

என்ன செய்ய?

தீவிரமாய் கண்களை கொட்ட கொட்ட விழித்தபடி சிந்திக்க ஆரம்பித்தாள் நந்தினி.

..........................

மறுநாள் நன்கு யோசித்து திடும்மெனத்தான் அவன் அலுவலகத்தில் போய் நின்றாள் அவள். எல்லாம் ஒரு அசட்டுத் துணிச்சல்தான்! அதையும் பார்த்து விடுவோம்! உள்ளுக்குள் உதடுகளுக்குள் முணுமுணுத்தவாறே அவன் அறைக்கதவைத் திறந்து நுழைந்தாள்.



மோக மகேந்திரன் சாய்வான குஷன் ஸீட்டில் அமர்த்தலாக அமர்ந்திருந்தவன் அவளைக் கண்டு கண்கள் விரிய திடுக்கிடவே செய்தான். அவள் ஒருவித இறுக்கத்துடன் போய் நின்றதை உற்று கவனித்து விட்டு. ஒரு நல்ல மனோதத்துவ டாக்டரைப் பார்ப்பது நல்லது. நான் ஒன்றும் டாக்டர் இல்லை..! என்றான்.

என்ன ஒரு திமிர்! அவளுக்கென நாடி நரம்புகள் பாதிக்கப்பட்டு மூளையா குழம்பி விட்டது? டாக்டரை பார்க்க வேண்டுமாமே!

அவனது குத்தலுக்கு பதிலடி கொடுக்க நினைத்த உதடுகளை அடக்கிக் கொண்டு, ஒரு முக்கியமான விஷயம் பேச உங்களிடம் வந்தேன்... என்றாள் நேரிடையாய்.

அவன் தோள்கள் அசட்டையாய் குலுங்கியது.

இனி பேச என்ன இருக்கிறது? எல்லாம்தான் முடிந்தாயிற்றே...! என்றான்.

முடிந்ததினால் தான் பேச வந்தேன்.. என்றாள் அவள் அழுத்தமாய்.

அவன் கண்களைச் சுருக்கி ஊடுருவினான்.

என்ன சொல்கிறாய்,

பழிக்குப் பழி படலம் முடிந்து விட்டது. உங்களது பழி வாங்கும் கணக்கு தீர்ந்து விட்டது தானே...?

அவன் தலையை லேசாக ஆட்டியபடி? கிட்டத்தட்ட அப்படித்தான்..! நீ சொல்ல வந்ததை சொல்லு.. என்றான்.

நான் நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் பொறுமையாக கேட்க வேண்டும்... என்றாள் பீடிகை போடுபவளாய்.

மறுபடி அவன் கண்களைச் சுருக்கி எனது பொறுமை நீ சொல்கிற விஷயத்தைப் பொறுத்து... என்றவன் அதே வேகத்தோடு, ம்ம்... ஆரம்பி... என்றான் அதிகாரமாய்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

எல்லாம் மனதுள் மணி மணியாய் கோர்த்து வைத்திருந்த வார்த்தைகள். அவனை எரிச்சல் படுத்தாத விதமாய் அவள் தேர்ந்தெடுத்து வைத்திருந்த வரிகள். இம்மிபிசகாமல் ஞாபகப்படுத்தி பேசினாள்.

அவள் நினைத்தபடியே அவனது முகம் அமைதியாகி சிந்தனைக்குப் போனது.

கவனித்து உற்சாகமானவள் தொடர்ந்து கவனமாகவே பேசினாள். கல்லும் கரையும் என்பது போல் அவனும் கரைந்து விட்டானோ... என்னவோ.. அவன் நிமிர்ந்து கைகளை உயர்த்தினான்.

நீ.... என்னதான் சொல்ல வருகிறாய்...? சுருக்கமாய்ச் சொல்லு..? என்றான்.,

அவள் இதைத்தான் எதிர்பார்த்தாள்? பழம் நழுவி பாலில் விழுவது போல்... அவன் மசிந்து விடுவது போல் தெரிகிறது? இனி விடக்கூடாது!

மறுபடியும் உள்ளுக்குள் உற்சாகமானவள் முகத்தை மட்டும் சோகமயமாய் வைத்துக்கொண்டு, எம்.டி. சார், நான் சொல்ல வருவது இதுதான். என் குடும்பம் செய்த மிகப் பெரிய தவறுக்காக நீங்கள் சரியான தண்டனை எனக்கு கொடுத்து விட்டீர்கள். அத்தோடு இந்த பழிக்குப் பழி கணக்கும் முடிந்து போயிற்று. ஆனால் என் மொத்த குடும்பமும் செய்த தவறுக்காக நான் ஒருவள் மட்டும் பாதிப்படைவது அவ்வளவு நியாயம் இல்லைதானே? அதனால்... அதனால்...

அவள் வேண்டுமென்றே வார்த்தைகள் வராதது போல் தயங்கினாள்.

ம்ம்... சொல்லு....

அதனால்... அப்படி பாதிக்கப்பட்ட நான் அந்த பாதிப்பிலிருந்து வெளிவருவதற்கும் நீங்கள் பெரிய மனது பண்ணி உதவி செய்ய வேண்டும்...

அவள் பேச்சை முடிப்பதற்குள் உதவியா...? அதுவும் என்னிடமா? கேட்டபடி அவன் கடகடவென நகைத்து நிறுத்தினான். நான் முதலில் சொன்னது போல் நீ பார்க்க வேண்டியது என்னையல்ல. ஒரு நல்ல மனோதத்துவ டாக்டரைத்தான்...! என்றான் அழுத்தமாய்.

அவள் எரிச்சலை உதடுகளை அழுந்தக் கடித்து நிறுத்திக்கொண்டவள், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்... புரியவில்லை? என்றாள் வேண்டுமென்றே கண் இமைகளைச் சிமிட்டி விழிப்பது போல்... பாவனையில்.



பிறகென்ன...? நான் உன்னுடைய எதிரி. நீயும என்னுடைய எதிரி. உன்னைப் பழிவாங்கிய என்னிடமே வந்து உதவி கேட்கிறாய்? அதான் உன் மூளை எதுவும் பிசகி....

அவன் முடிப்பதற்குள், ஒரு சின்ன திருத்தம் உங்கள் எதிரி நான் அல்ல. எனது குடும்பம். நீங்கள் பழி வாங்க நினைத்தது என் குடும்பத்தைத்தான். என்னை மட்டுமல்ல... என்றாள் குரலை உயர்த்தி.

அதுவும் சரிதான்...! என்றபடி அவன் தலையாட்டியவன், ஆனால் அகப்பட்டது தூண்டில் மீனாய் நீ ஒருத்திதானே? சொல்லப்போனல் உன் அக்கா நளினாதான் என்னுடைய குறி. அவள்தான் கல்யாணம் என்ற பெயரில் யாரையோ கட்டிக்கொண்டு தப்பிவிட்டாளே? அதான் உன்னை அடித்தேன். நான் உனக்கு கொடுத்த அடி அவர்களது மனதை வலிக்கச் செய்தது உண்மைதானே? என்றான்.

அதில் இன்னமும் உங்களுக்கு சந்தேகம் இருக்கிறதா? வெளியில் தலைகாட்ட முடியாத அளவுக்கு எல்லோரும் இடிந்து போயிருக்கிறார்கள்... அதிலும் அக்கா நளினா, உனக்கா இப்படி நடக்க வேண்டும்? என பல முறை என்னைக் கட்டிக்கொண்டு அழுது தீர்த்து விட்டாள் தெரியுமா?

அப்படியா....? அப்படியா...? முகத்திலும் கண்களிலும் பரவசம் பொங்க அவன் கேட்டபோது, சந்தோஷம் ஜொலிக்கும் அந்தக் கண்களில் கொள்ளிக்கட்டையை எடுத்து சொருகலாம் போல் அவளுக்கு இருந்தது.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, நன்றாக ஆனந்தப்படட்டுமே. என அவளது மொத்த குடும்பமும தரையில் உருண்டு புரண்டு அழுது தீர்த்ததாக இரண்டு மூன்று பிட்களையும் சேர்த்து அவன் காதில் போட்டாள்.

புளகாங்கிதம்தான் அவனுக்கு!

கை தட்டாத குறையாய் எல்லாவற்றையும உன்னிப்பாய் கேட்டு உற்சாகம்தான் கொண்டான் மோகன மகேந்திரன்!

அந்த அவனது உற்சாக மனநிலையிலே சட்டென மெயின் பாயிண்டுக்குத் தாவி பேச்சை மாற்றினாள் அவள்.

அதா... அதனால்தான் சார்... எங்களது மொத்த குடும்பமும் கதிகலங்கி சீர்குலைந்து கிடக்கிறது. இந்த கஷ்டமான சூழ்நிலையில் நீங்கள்தான்... உங்களைத் தவிர வேறு யாரும் எங்களுக்கு உதவ முடியாது... அதற்குத்தான்... உதவி...

அவள் நிறுத்த அவனும் சட்டென விஷயத்திற்கு வந்தான்.

அப்படி என்ன உதவி என்னிடம் எதிர்பார்க்கிறாய்?

உங்கள் கம்பெனியில் ஒரு வேலை வேண்டும்....

வேலையா...? அதுவும் என் கம்பெனியிலா? அவன் இம்முறை கடகடவென சிரித்துவிட்டான்.

அவனது கிண்டல் கேலியை எல்லாம் உடன் சீரியஸான பேச்சிற்கு மாற்ற நினைத்தவள், நான் இப்படிக் கேட்பது நகைப்புக்குரிய விஷயமாய்த்தான் தோன்றும். ஆனால் எனது உண்மையா சூழ்நிலை... அப்படி....

சூழ்நிலையா..?

ம்ம்... நான் வேலை பார்த்தது ஒரு சிறிய ஷிப்பிங் கம்பெனி ஒன்றில்தான். அங்கு கல்யாண இன்விடேஷன்கள் எல்லாம் கொடுத்து கல்யாணம் நடக்கப் போவதை பிரபலப்படுத்தி... இப்போது நின்று விட்டதால்... அங்கும் தலைகாட்ட முடியவில்லை. ஆள் ஆளுக்கு கேள்விகளால் துளைக்கிறார்கள் சரி... வேறு ஏதாவது வேலை தேடுவோம் என்றால்... உடனடியாக வேலை கிடைப்பதும் குதிரைக் கொம்பாக இருக்கிறது. வீட்டுச் சூழ்நிலைக்கும் சரி எனது மனக்குழப்பத்திற்கும் சரி... நான் உடனடியாக வேலைக்கு போயாக வேண்டும். அதனால்தான் உங்கள் அலுவலகத்திலேயே வேலை கேட்கிறேன்....

அவள் தனது நீண்ட உரையை முடித்து விட்டு அவனது முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

வெளிப்படையான பேச்சு... ! அதுவும் சரிதான்...! உதடுகளை பிதுக்கியபடி தலையை வேகமாய் அசைத்தான்.

நீ என்ன படித்திருக்கிறாய்? உனக்கு என்ன தெரியும்? எனக் கேட்டவன் சட்டென ஞாபகம் வந்தவனாய் தன் முன்னால் இருந்த லேப்டாப்பின் பட்டன்களைத் தட்டினான்.

முதல் முறையாய் அவன் முகத்தில் இறுக்கம் மறைந்து புன்னகை பரவியது.

முன்பே... என்னிடம்... வேலை கேட்டு இன்டர்வியூவிற்கு வந்தவள்தானே? உன் பயோடேட்டா... ஜாதகம் எல்லாம் அத்துப்படியாய் என்னிடம் இருக்கிறது.... எனச் சொல்லியபடி லேப்டாப்பின் திரையில்



பார்வையை ஓட்டியவன், ம்ம்... கம்பெனி செகரெட்டரியன்ஷிப்...... எம்...சி...ஏ....ம்ம்... ஓ.கே...! ஓ.கே....! என்ற முணுமுணுப்புடன்... நாளைமுதல் நீ வேலைக்கு வருகிறாய். என்னுடைய பர்ஸனல் அசிஸ்டெண்ட்.... செகரட்டரி.... போஸ்டிங் உனக்கு! என்ன சொல்கிறாய்? சட்டென முடிவெடுத்து அவன் கேட்டும் முடித்தான்.

பழம் நழுவி பாலில் அல்ல... நேரிடையாக வாயிலே வந்து விழுந்து விட்டதே...! இது... இந்த பதவியைக் குறிவைத்து தானே காயை நகர்த்தினாள்? பாவம் பரிதாபக்கேஸ் போல் எல்லாம் நாடகம் போட்டாள்?

நம்பி விட்டானே! அவள் மனம் உடைந்து நொந்து நூலாகி விட்டதாய் உண்மையிலேயே நினைத்து விட்டானே!

அதுவும்... பர்ஸனல செகரட்டரி. அந்தரங்க காரியதரிசி. நம்பிய அவனை, நம்ப வைத்து கழுத்தறுக்க... அவளுக்கு தேவைப்படும் அவசியமான போஸ்டிங்! சரியான உத்யோகம்!

ஹீர்ர்ரேர.! என உள்ளுக்குள் சந்தோஷமாய்க் குதித்தாள். கூவினாள். பின் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாதவளாய் பவ்யமாய் தலையாட்டினாள்.

உணர்ச்சி வசப்ப ட்டவள் போல் கை கூப்பி நன்றி சொன்னாள்.

நன்றியெல்லாம் இருக்கட்டும். ஒழுங்காக வேலை பார்க்க வேண்டும். இல்லையென்றால் உடன் வீட்டுக்கு அனுப்பி விடுவேன். புரிகிறதா? ம்ம்.. போகலாம்....! எல்லாம் ஒரு பரிதாபத்திற்காகத்தான்..! பாவத்திற்கான விமோசனமாகத்தான்...! என்றெல்லாம் பேசி அவன் அனுப்பியது ஏனோ... அவள் காதுகளில் மட்டும் உரைக்கவே இல்லை!



## 11



வீட்டிற்குள வந்து வெகுநேரமாகியும் நந்தினிக்கு திகைப்பு அடங்கியபாடில்லை! ஒரே ஆச்சரியம்தான்!

எப்படி இது நிகழ்ந்தது?

எவ்வளவு சுலுவாய் அந்த மோகன மகேந்திரன் அவளை நம்பிவிட்டான! அதுவும் ஒரு பரிதாப போஸ்... இரண்டு மூன்று டயலாக்குகள் இரக்கமான தொனி... கெஞ்சல்... அவ்வளவுதா!

திட்டம் போட்டு அவளைப் பழி வாங்கியவன் வெகு எளிதாய் கவிழ்ந்து விட்டானே!

எதனால்...? எப்படி ஏமாந்தான்? அவளுகக்கே வேலை... கொடுக்க சம்மதித்து... அதுவும் அவள் எதிர்பார்த்த அதே... பர்ஸனல் அசிஸ்டெண்ட் வேலை...? நம்ப முடியாத ஆச்சரியம்தான்!

எப்படி விழுந்தான்...?

விழுந்தான் என்ன...? அந்த சதிகாரனை விழ வைத்தது அவள்தானே! அவளது லாவகமான பேச்சி நடிப்பு... எல்லாவற்றையும் நமபி அவன் விரித்த வலையில் எளிதில் சிக்கியும் கொண்டான்!

இனி விடக்கூடாது...!

தினம்... தினம் அதே நடிப்பைத் தொடர்ந்து அவன் நம்பிக்கையைப் பெற்று... படிப்படியாய் அவன் தொழில் ரகசியங்களை... முக்கியமாய் அவனது பிரபலமான சலவைத்தூள் ரசாயத பார்முலாவை தெரிந்து கொண்டு... விட்டால் போதும்!

அதன் பின் எளிதாய் அந்த பார்முலாவை எதிரிகளான அவனது போட்டி சலவைத்தூள் கம்பெனிகளிடம் கொடுத்து விட்டால்... வேலை மிக மிக சுலுவாகிவிடும். டூப்ளிகேட் பாக்கெட்டுகளை நிறைய உற்பத்தி பண்ணி ஒரே நாளில் அவனது பிராண்டிற்கு மக்களிடம் இருக்கும் நம்பிக்கையை அவர்கள் காலி பண்ணி விடுவார்கள்!

பின் ஒரே மாதத்தில் கிடுகிடுவெ விற்பனை சரிந்து அவனது பிரபலமான புலிமார்க் சலவைத்தூள்... காகிதப்புலியாகி விற்பனையாகாமல் சந்தி சிரிக்க அரம்பித்துவிடும்! கோடிகளை டர்ன் ஓவராக பண்ணிக் கொண்டிருந்த அவனது தொழில் சாம்ராஜ்யம் பின் நயா பைசா கணக்கு பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிடும்!

தன்னை தன்குடும்பத்தை இவ்வளவு கேவலப்படுத்தி அசிங்கப்படுத்தியவனுக்கு சரியான பதிலடி! டிட் ஃபார் டாட் என்பது போல் பழிக்குப் பழி... வெட்டுக்கு வெட்டு. குத்துக்கு குத்து... அவன் அத்தோடு ஒரேடியாக போண்டியாகிவிட வேண்டும். ஆணவம் திமிர் எல்லாம் அடங்கி ஒடுங்கிவிட வேண்டும்...



ஒடுங்கிவிட வைப்பாள் அவள்!

அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கும் போதே அவளுக்கு பரவசமாய் இருந்தது. மோகனமகேந்திரன் அழுக்குப்படிந்த சாதாரண சட்டைபேண்ட்டுடன் தலையை தொங்கப் போட்டவாறு ரோட்டில் நடந்து போகிறான். நின்று நிதானித்து அதை ரஸிக்கிறாள். ரஸிக்கிறாள்! ரஸிக்கிறாள்!

நினைவில் இப்படியெல்லாம் காட்சிகளை ஓடவிட்டு ஆனந்தம் கொண்டவளுக்கு சட்டென விஷயத்தை இன்னும் வீட்டில் சொல்லவில்லையே என்பது உரைத்தது.

சொல்லிவிடலாமா..? சொன்னால் என்ன ஆகும்? என நினைத்துப் பார்த்தாள். அவர்கள் பணக்காரர்கள் நமக்கு எதற்கும்மா... வீண் பொல்லாப்பு? என நிச்சயம் கலவரமான முகத்துடன் அப்பாவும் அம்மாவும் பயந்து நடுங்குவார்கள் என்பதை மனதில் தோன்றியது! நடந்தது நடந்து விட்டது. இனி அதை மறந்து விடு. நாம் ஒதுங்கிப்போவோம்... என அட்வைசும் பண்ணுவார்கள். மற்றபடி இந்த ஒன்றில் இரண்டு அவனைபார்த்து விடுவோம்... அவனை ஒரு வழி பண்ணிவிடுவோம் என்கிற ரோஷமோ, தில் லோ அவர்களுக்கு வரப் போவதில்லை. வரவும் செய்யாது.

தில் எல்லாம் அவளுக்குத்தான்! முஷ்டியை மடக்கிக்கொண்டு சிக்கு சரி நிற்கப் போவதும் அவள்தான்! என்ன ஆனாலும் சரி... தன்னை இவ்வளவு கேவலப்படுத்தி அசிங்கப்படுத்திய மோகன மகேந்திரனை அவள் சும்மா விடப் போவதில்லை. ஒரு வழி பண்ணி பழி தீர்க்காமல் ஓயவும மாட்டாள்!

தனக்குத்தானே பேசி நினைத்துக் கொண்டவள் மறுகணமே இந்த வேலை விஷயத்தை வீட்டில் சொல்லாமல் மறைத்து விடுவது என்ற முடிவுக்கும் வந்தாள். ஏதோ ஒரு புதுக் கம்பெனியில் வேலை. நல்ல சம்பளம் என்று சொல்லிவிடுவோம். இப்போது இருக்கும் சோகமான மனநிலையில் யாரும் தோண்டித்துருவப்போவதில்லை. அவள் பாட்டுக்கு வேலைக்கு சென்று விட்டு வரட்டும் என விட்டு விடுவார்கள்.

அது போதும் அவளுக்கு! அந்த நினைப்பை உடனே செயல்படுத்தியது போது யாரம் எதிர்கேள்வி கேட்கவில்லை. தலையாட்டத்தான் செய்தார்கள். அந்த உற்சாகத்திலேயே மறுநாள் ஹாண்ட்பேக் சகிதமாய் வேலைக்கு கிளம்பிவிட்டாள்.

இம்முறை இன்னொரு விஷயத்திலும அவள் கவனம் செலுத்தியிருந்தாள். அது ஆடை அலங்காரம்! பீரோவைக் குடைந்து

பத்திரப்படுத்திடி வைத்திருந்த மிகமிக நல்ல சேலைகளை வேலையின் ஆறுநாட்களுக்காக வரிசைப்படுத்திக் கொண்டாள். எல்லாமே பளிச் ரகம்தான். ஆளைத் தூக்கி அடிக்கிறதடி..... என ஒவ்வொரு முறை கட்டும்போதும் அக்காவிடமிருந்து கமெண்டரிடி வந்து அவளை குளிர வைக்கும்.

ஆடை போதாதென்று கண்ணாடி முன் நிலை நின்று சில செயற்கை ஒப்பனைகளையும் செய்தாள். முடிக்கற்றையொன்றை கொடுத்தாய் முன்புறம் இழுத்து வளைத்து ஸ்ப்ரிங் வளையமாய் நெற்றியில் புரளவிட்டாள்

தலைக்கேசத்தின் அந்த சின்ன மாறுதல் கூட முகப் பொலிவை பளீரென மாற்றி, முன்புற முக அழகை வெகுவாய் கூட்டியிருப்பதை அப்பட்டமாய் உணர்ந்தாள். இது போதும் என்ற திருப்தியுடனே கண்ணாடி முன் இருந்து அகன்று கிளம்பினாள்.

இந்த அழகு காட்டும் அதீத ஒப்பனை கூட மனதில் ஓடிய ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான். சதிகாரனுடைய கோட்டையில் போய் சதிவலை பின்ன இருக்கிறோம் அவன் அவளது நேர்க்கத்தை கண்டுபிடிக்காமல் இருக்க அவனது கவனத்தை திசைதிருப்ப... இது போன்ற அழகு ஒப்பனைகள் உதவி செய்யும். என்பது அவள் நினைப்பு....

அனால் வேலையில் சேர்ந்தவளுக்கு நிறைய ஆச்சரியங்கள் காத்திருந்தது என்றே சொல்லலாம்.

மோகன மகேந்திரனின் பர்ஸனல் செகரட்டரி என்றவுடன் அவள் நினைத்தது போல் அவனுக்கு அருகிலோ அவனது அறியிலோ அவளுக்கு பணியிடம் அமையவில்லை. அவனது கேபினுக்குச் சற்றுத் தள்ளி சிறிய அறை ஒன்றை அவளுக்கு ஒதக்கியிருந்தார்கள். இன்டர்காம் உள்தடங்களின் தொலைபேசி இணைப்பு, லேப்டாப் கணினி, அலுவலக குறிப்புகள், பணியாளர் தகவல்கள் என சிறிய வட்டத்திற்குள் அவளது செகரட்டரி வேலை அடங்கியிருந்தது.

அவளது மிகப் பெரிய ஏமாற்றம் அவள் அவனது பர்ஸனல் செகரட்டரி என்றாலும் அவ்னை நேருக்கு நேர் பார்க்க வேண்டிய அவசியமில்லாமல் போனதுதான் எல்லாம் இன்டர்காம் மூலமான உரையாடல்கள்தான். அவன் கொடுக்கும் இன்ஸ்ட்ரக்ஷனை அவள் அந்தந்த வேலைப் பிரிவுகளுக்கு அனுப்பி செயல்படுத்த வேண்டும்.



அவ்வப்போது வேலைப் பிரிவிலிருந்து வரும் உற்பத்திடி தர ரிப்போர்ட்களை சரிபார்த்து அவனது பார்வைக்கு அனுப்ப வேண்டும். அதை சாக்கு வைத்தாவது அவனது ரூமனுள் நுழையலாம் என்று பார்த்தால் அதரற்கும் ஒன்றுக்கு இரண்டாய் இரண்டு பியூன்கள் ஏற்பாடு செய்திருந்தான். பைல்களை அவளிடம் எடுத்துச் செல்வதற்காக அவர்கள் தவம் போல் காத்திருந்தார்கள். அவள் புரியாமல் என்ன செய்வது என தவித்து விழித்து கைகளைப் பிசையவே செய்தாள்.

வேலைக்குச் சேர்ந்த முதல் நாளிலே மேனஜர் மூலம் அவளது வேலை பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து கொண்டாள். கேபினுக்குள் நுழைந்து பணிவாய் வணக்கம் போட்டு விஷ்செய்த அவளின் முகத்தைக்கூட பார்க்காமலே மோக மகேந்திரன், இன்று முதல் உன் பணியை ஆரம்பிக்கலாம். பணி இடத்தில் உனக்கு எவ்விர பிரச்சினையும் இருக்காது. சம்பளம், டிஏ, பிஎப்., அலவன்ஸ் மற்ற விபரங்களை மேனஜர் தெரிவிப்பார். நீ போகலாம். குட்லக்! பைல்களில் பதிந்திருந்த முகத்தை நிமிர்த்தாமலே சொன்னான்.

புதிராய் பார்த்து தலையாட்டியபடி வெளி வந்தாள் அவள். சரியான கல்லூளி மங்கன்தான் போலும்! அவன் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்கவில்லையே ஏமாற்றமாக நினைத்தாலும் தன் முயற்சிகளை கைவிடக் கூடாது. தான் நினைத்ததை சாதித்துவிட வேண்டும் என்கிற வெறி மட்டும் அவள் மனதில் நெருப்புக்கனலாய் தகதகத்துக் கொண்டிருந்தது.

ஆயினும் எதையும் வெளிக்காட்டாமல் சிரத்தையாய் வேலைகளில் கவனம் செலுத்தினாள். முதலில் அவனது கம்பெனியைப் பற்றி முழுவதும் தெரிந்து கொள்வோம்... என உற்பத்திப் பிரிவு, டெஸ்பாட்ச் மார்க்கெட்டிங்... என் அனைத்திடிலும் கவனம் செலுத்தி விஷயங்களைத் தெரிந்து கொண்டாள். கூடவே எல்லாவற்றுக்கும் மூலதனம் அந்த சலவைத்தூளின் கலப்புத் தன்மை மோகனமகேந்திரன் கண்டுபிடித்து ரகசியமாக பாதுகாத்து வரும் அந்த ரசாயன பார்மூலா!

அந்தக் கலவையின் அற்புதத்தாலே அவனது சலவைத்தூள் பிராண்ட் மற்ற கம்பெனிகளின் தயாரிப்பை பின்னுக்குத்தள்ளி முன்னணியில் நிற்கிறது. ஆக அந்த பார்மூலாதான் முக்கியம். மோக மகேந்திரனின் தொழிலுக்கான ஆணிவேர்!

அதை மட்டும் சரியாய் கண்டுபிடித்து ஒரு அசைப்பு அசைத்து விட்டால் போதும் சீட்டுக்கட்டு மாளிகை விழுவது போல் ஒரே நாளில் கவிழ்ந்து அவனது தொழிலே ஸ்தம்பித்து விடும்.

அவள் நினைத்த பழிவாங்கலும் எளிதில் நடந்துவிடும். குஷியாய் நினைத்து வேலைகளில் தினம் தினம் ஆழ்ந்தவளுக்கு, தன்னை ஒவ்வொரு நொடியும் மோக மகேந்திரன் க்ளோஸ் சர்க்யூட் காமிராமூலம் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்பது தெரிய வந்தபோது பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.!



# 12



நந்தினிக்கு பெரும் அதிர்வுதான் மகேந்திரனின் இன்னொரு செகரட்டரியான மார்க்கரெட் பியூலா அவளிடம் சொன்ன விஷயம் பெரும் திகைப்பையூட்டியது.

பியூலா நடுத்தர வயது பெண்மணி கணச்ச சரீரத்துடன் உதடுகளில் புன்னகை வழிய அலுவலகத்தில் வளைய வருபவள். எல்லோரிடமும் இனிதாய் பழகுபவள் நந்தினியிடமும் பெரும் அன்பு காட்டினாள்.

அதனாலே நந்தினியிடம் வந்து, உனக்கு விஷயம் தெரியுமா? நீ அலுவலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் கண்காணிக்கப்படுகிறாய்.... என எச்சரிக்கவும செய்தாள்.

புரியாமல் விழித்த நந்தினியிடம் விளக்கவும் செய்தாள். அவள் கைகள் அலுவலகத்தின் ஒவ்வொரு அறையிலும் பொருத்தப்பட்டியிருந்த சிறிய காமிராவைக் காட்டியது.

நந்தினி அந்தக காமிராவின் மானிட்டர்கள் மூலம் நமது எம்.டியால் அவலுவலகத்தில் நடக்கும் அத்தனை விஷயங்களையும் அவரது அறையில் உட்கார்ந்த இடத்தில் இருந்தே பார்க்கமுடியும். நான் நேற்று தற்செயலாய் எம்.டியிடம் ஃபைல் ஒன்றைக் காட்டுவதற்காக சென்றபோது அவர் முன் இருந்த டிவி மானிட்டரில் நீ வேலை பார்க்கும் காட்சி தெரிந்து கொண்டிருந்தது. அதாவது எம்.டி க்ளோஸ் சர்க்யூட் காமிரா மூலம் நீ வேலை பார்ப்பதை கண்காணித்துக் கொண்டிருந்தார் என்பது புரிந்தது. அதான் உன்னை எச்சரிக்கை செய்ய நினைத்தேன். எதற்கும் வேலையிலவ் கவனமாக இரு...!

பியூலா சொன்னதும் அதிர்ச்சியில் உறையத்தான் செய்தாள் அவள். இந்த மோக மகேந்திரன் அவளை முழுவதுமாய் நம்பி விட்டான் என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறாள்? அது எவ்வளவு பெரிய



தப்புக்கணக்கு? தலையை விட்டு விட்டு வாலைப் பிடிப்பது போல் அல்லவா கிராதகன் அவளை நம்பாமல் ரகசியமாய் வேவு பார்த்துக் கொண்டிருக்கிறான்!

நல்லவேளை! அவள் அலுவலக வேலை சமயத்தில் வேறு எதுவும் வெளிக்காட்டாமல் யாரிடமும் விஷயங்களை தோண்டித்துருவாமல் கண்ணும கருத்துமாய் வேலையில் ஆழ்ந்திருந்தது வசதியாய்ப் போயிற்று. இல்லையெனில் இந்த மோக மகேந்திரன் அவள் மீது சந்தேகம் கொண்டிருப்பானோ?

அன்று மாலை வேலை முடிந்ததும் கேன்டீன் பக்கம் பெஞ்சில் அமர்ந்து அது பற்றிறே தீவிரமாய் சிந்தித்தாள்.

கூடாது! அந்த மகேந்திரனுக்கு கொஞ்சமம் சந்தேகம் வரக்கூடாது! வந்தால் காரியம் கெட்டு விடும். அவள் நினைத்ததை சாதிக்க முடியாது.

அதனால் அவனுக்கு உடனே நம்பிக்கை வரும்படி நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடந்தால் தான் மகேந்திரன் நம்புவான். அவளை சந்தேகக் கண்களால் விரட்டுவதை நிறுத்துவான்.

சரி... அப்படி நம்பிக்கையை பெற என்ன செய்வது? என நினைத்தபோது பொட்டிலடித்தாற் போல் மனதுள் பதிலும் தோன்றியது.

வேறென்ன? வேலையில் முழு ஈடுபாடு உள்ளது காட்டினால் போதும்தானே? நம்பி விடுவாள்தானே?

அடுத்த **அக்ஷயா** மாத நாவலில்
**அகிலாகோவிந்த்** எழுதும்
**காதல் பைங்கிளி...!**
அட்டகாசமான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

மேலும் மேலும் அவளை தன் மூளைப்பகுதியை உலுக்காத குறையாய் யோசிக்க புதுப்புது யோசனைகள் பிறந்தது. வேலையில் ஈடுபாடு காட்டினால் மட்டும் போதாது. சாதிக்க வேண்டும். வேலையில் ஏதாவது சாதனை செய்து காட்ட வேண்டும். அப்படிச் செய்தால்தான் எல்லோருடைய கவனத்தையும், பாராட்டையும் ,பெறமுடியும்! அந்த மகேந்திரனும ;அவளை நம்புவான்.

தன் நினைப்புக்கு உருக்கொடுக்க முடிவு செய்து உற்சாகமாய் எழுந்து கொண்டாள் அவள்.

அதற்குப்பின் வந்த ஒரு வாரமும் தனது திறமையைக் காட்ட என்ன செய்ய முடியும்? என்பதில் நேரத்தைச் செலவழித்து ஒரு வழியையும் கண்டு பிடித்தாள்.

அதன்படி அவளது சலவைத்தூள் தயாரிப்பு கம்பெனியில் மார்க்கெட்டிங் பிரிவில் சரியான நிர்வகிப்போர் இல்லாமல் எல்லோரும் திணறிக் கொண்டிருப்பது தெரிந்தது.

மகேந்திரனிடம் செகரட்டரி என்ற முறையில் அந்தப் பிரிவில் தலையிட்டு வேண்டிய விபரங்களை எல்லாம் சேகரித்தாள். மார்க்கெட்டிங் எனப்படும் சந்தைப் படுத்துதலில் தேவையில்லாமல் நிறைய குழப்பங்களை ஏற்படுத்திடி பணியாளர்கள் திணறுவதை கண்டுபிடித்தாள்.

அதிலும் முக்கியமாய் தூள்கள் உற்பத்தி ஆகி தேவைப்படும் இடங்களுக்கு டெஸ்பாட்ச் ஆகுவதில் நிறைய காலதாமதம் ஆவதையும் உணர்ந்து கொண்டாள்.

அதற்கு முக்கியமாக கம்பெனியின் சொந்த வாகனங்கள் உபயோகப்படுத்துவதால் ஒரு நாளைக்கு இரண்டு டெலிவரிகள் மட்டுமே நடந்து தேவைப்படும் ஆர்டர்கள் மெதுவாகவே வாடிக்கை ஏஜண்டுகளுக்கு சப்ளை ஆவதும் புரிந்தது.

இதை எப்படி சரி செய்வது? என் நினைத்து அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தாள். அதாவது கம்பெனியிலிருக்கும் பத்து சரக்கு லாரிகளை மட்டும் நம்பாமல் வாடகைக்கு என கூடுதல் ஒரு பத்துலாரிகளை டிராவல் ஏஜெண்டுகள் மூலம் பிடித்து சரக்குகளை உடனுக்குடன் சப்ளை செய்ய ஏற்பாடு செய்தாள்.

அதனால் ஸ்டாக்கிஸ்ட்டுகளிடம் ஆர்டர் எடுக்கும்போதே உடனடியாக சரக்குகள் டெலிவரி செய்யப்படும் என உறுதி கூறி ஆர்டர் எடுக்கச் செய்தாள்.



மார்க்கெட்டிங் பிரிவில் அவள் இப்படி கொண்டு வந்த மாற்றம் மிகப் பெரிய நல்ல பலன் ஒன்றைத்தரும் என அப்போது அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை!



## 13



நந்தினிக்கு இம்முறையும் ஆச்சரியமே! அவள் நினைத்தது போலவே அந்தப் புதுவிதமான அவளது மார்க்கெட்டிங்முறையில் கம்பெனிக்கு பல இலட்சங்கள் மிச்சமாகி லாபம் அதிகரித்திருந்தது.

அன்றைய டைரக்டர்களிடன் மீட்டிங்கிற்கு, அவசியம் நீயும் கலந்துகொள்ள வேண்டும்... என மகேந்திரன் சொல்லி அவளை மீட்டிங் ஹாலில் உட்கார வைத்திருந்தான்.

அப்போதே எல்லா டைரக்டர்களின் முன் அவளை அறிமுகப்படுத்தி கம்பெனியின் புதிய மார்க்கெட்டிங்க அணுகுமுறையை உருவாக்கியது அவள்தான் என புகழாரம் சூட்டினான். எல்லோரும் பரபரவென கைதட்டினார்கள். மோக மகேந்திரன் முதல் முறையாய் அவளைப் பார்த்து உண்மையான பளீர்சிரப்பு ஒன்றைத்தவழ விட்டான்.

அட... இவனுக்கு இப்படி சிரிக்கவும் தெரியுமா? எனத்தான் உற்றுப் பார்த்தாள் நந்தினி.

பின் மீட்டிங் முடிந்ததும் அவளை் தன் கேபினுக்கு வரச் சொன்னான் மோகன மகேந்திரன், எவ்வித சலனமுமில்லாமல் உள்ளே நுழைந்து அவன் முன் பவ்யமாய்த்தான் நின்றாள் அவள்.

அவனும் ஒரிரு நிமிடம் ஒன்றும் பேசாமல் அவளையே உற்றுப் பார்த்தது அவளை என்னவோ செய்தது. எரிச்சலாக உணர்ந்தாள், ஸார்... என்ன விஷயம்..? சொல்கிறீர்கள்? என்றாள் குரலை உயர்தியபடி.

புருவத்தை விரித்து மறுபடி பார்த்தவன் கடகடவென ஒரு சிரிப்பை ஓடவிட்டவாறு, ஒன்றுமில்லை... நந்தினி, நீ மார்க்கெட்டிங் பிரிவில் செய்த சாதனையால் பல'லட்சங்கள் நம் கம்பெனிக்கு லாபமாய் கிடைததிருக்கிறது. நான் கூட உன்னை முதலில் சரியாக எடைபோடாமல் உன் திறமையை குறைத்து மதிப்பிட்டிருந்தேன். ஆனால்... நீ... நான் எதிர்பார்த்ததைவிட

திறமைசாலியாய் இருக்கிறாய். கன்கிராட்ஸ் டு யூ.... நந்தினி..! என படபடவென பேசி முடித்தான்.

இதற்கு என்ன செய்வது? என யோசித்தவள் மறுகணமே வலுக்கட்டாய புன்னகையொன்றை வரவழைத்துக் கொண்டு, தாங்க்யூ ஸார்... என்றாள் எவ்வித படபடப்பும் இல்லாமல்.

அத்தோடு இவன் முன் எதற்கு இந்த இளிப்பு நடிப்பு... என்ற அருவையுடன் ஒரு விஷ் செய்தவாறு விடைபெற்று அங்கிருந்து அகலவும் போனாள்.

மகேந்திரன் அப்படித் திரும்பி நடக்கப் போனவளை, ஒன்மினிட்... என்றபடி நிறுத்தினான்.

மறுபடியும் அவன் கண்கள் விரிந்தது. அந்த உகறுத்தலான பார்வை அவளைப் பார்த்தான்.

அவள் அதற்கும் உதடுகளைக் கடித்தபடி பேசாமல் அதே சலனமில்லாத பார்வையைப் பார்த்தாள். அவன் முகக் குறிப்பை படிக்க முயன்று ஆராய்ந்தாள்.

ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? என்றான் அவன்.

ஒன்று பேசத் தேவையில்லை என்பதுபோல் இறுக்கமாய் இருந்தவள், பேசாவிட்டால் அதற்கும் எதாவது கேள்விகளை கேட்டுத் தொலைப்பான் என்ற எரிச்சலில், ம்ம்.. என்றாள் அழுத்தமாக.

உண்மையிலேயே... நீ மிக அழகாய் இருக்கிறாய்..! அதுதான் நான் உன்னிடம் சொல்ல விரும்பியது... என்றவன் மறுகணமே முகம் மாறிக்கொண்டு, ம்ம்... ஓ.கே..! நீ போகலாம்..! என அவளுக்கு விடையும் கொடுத்தான்.

கொஞ்சம் திகைப்பு தாக்கத்தான் அவனது கேபினை விட்டு வெளிவந்தாள் நந்தினி.

என்ன இவன் திடீரென இளிப்பு செய்கிறான்? அழகாய் இருக்கிறாய்.. என்கிறான்...? எதனால்? மறுபடியும் முன்பு செய்தது போல்.. எதாவது பிளானுடன் நடித்து விஷமத்தனம் செய்ய திட்டமிடிருக்கிறானோ?

மின்னலாய் நினைத்து கொதிக்கப் போனவளுக்கு மறுகணமே இன்னொரு நினைப்பும் தோன்றியது.



இருக்காது... ! நிச்சயம் இருக்காது! அந்த வசீகர கள்ளமில்லா சிரிப்பு.... சாந்தமான கண்களில் உள்ள கருவிழிகளில் தெரிந்த அந்த நேரான பார்வை... எல்லாமே முன்பு போல் இல்லாமல் ஒரு உறுதியை அல்லவா எதிரொலித்து தொனித்தது?

அதில் எவ்வித ஏமாற்றுத்தனமும், பாசாங்கும் இருப்பது போல் தெரியவில்லையே?

அப்படியானால் அவன் அவளை நம்பிவிட்டானா?

அவனது கம்பெனிக்காக நிஜமாக உழைத்துக்கொண்டிருப்பதாக நினைத்து விட்டானோ? அதனாலே இந்த திடீர்ப் பாசம், பாராட்டு எல்லாம் பொத்துக்கொண்டு வருகிறதோ?

நினைத்தவளுக்கு, மீண்டும் சந்தோஷம் மனதில் துளிர்க்க ஆரம்பித்து.

அடுத்து வந்த நாட்கள் நந்தினிக்கே ஆச்சரியம்தான்! அவள் கம்பெனியின் லாபத்தை உயர்த்தியதால் அவளுக்கு தனி இன்க்ரிமென்ட், கூடுதலான சில பொறுப்புகள் பணியாளர்கள் யாருக்கும் இல்லாத விசேஷ சலுகைகள்!

முக்கியமாய் அவள் நிறுவத்தின் எந்தப் பிரிவிற்கும் சென்று ஆராயலாம். தேவைப்படும் ஆலோசனைகளைச் சொல்லலாம். என அவளுக்கு ஸ்பெஷலான பர்மிஷன்!

எல்லாம் அவளது வேலையை பாராட்டும் விதமாய் மோக மகேந்திரன் அளித்திருந்த சலுகைகள்!

முதலில் இதில் என்ன வந்துவிடப் போகிறது? என அசட்டையாய் நினைத்தவள் பின்தான் விஷயம் அறிந்து அற்சாகம் ஆனாள். ஏனெனில் இந்த விசேஷ சலுகை மூலம் யாருமே எளிதில் நுழைய முடியாத உற்பத்திப் பிரிவின் பார்முலா மையத்தினுள் சென்று பார்வையிடலாம். அங்குதான் அந்த சலவைத் தூள்களின் ரசாயனக் கலவைக்கான பார்முலா இருக்கிறது. அதைக் கைப்பற்றுவது அதை தெரிந்துகொள்வதுதானே அவளது திட்டம்?

பயங்கர குஷியானவள் அதற்காக தன் திட்டத்தை உடனே செயல்படுத்த அவசரம் காட்டவில்லை. அவள் காட்டும் வேகம் யாருக்கும் சந்தேகம் வந்துவிடக்கூடாது என நிதானித்தே செயல்பட்டாள்.

மெல்ல மெல்ல ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு நாள் என்பது போல் தினம் ஒரு பிரிவில் சென்று கவனம் செலுத்தினாள். பார்வையிட்டாள்.

அதில் தனக்குத்தோன்றிய ஐடியாக்களை எல்லாம் உடனுக்குடன் ரிப்போர்ட்டாக எழுதி மோக மகேந்திரனின் பார்வைக்கும் அனுப்பி வைத்தாள்.

அவளது இந்த செய்கைக்கு பலமான ஒரு காரணமும் இருந்தது. நாளை இப்படியே ஒருநாள் அந்த பார்மூலா பிரிவில் அவள் நுழைந்து அந்த ரகசிய பார்முலா பற்றி அறிய முயற்சிக்கையில் யாரும் தடுத்துவிடக்கூடாதே... அதனலே கம்பெனியின் ஒவ்வொரு பிரிவிலும் தனக்க மிகுந்த அக்கரை இருப்பது போல் காண்பித்தாள். செயல்பட்டாள்.

மறுவாரம் அவள் நினைத்தவிஷயம் கைகூடியது. அந்த சலவைத்தூள் பார்மூலா பிரிவில் பார்வையிட நுழைந்தாள். அவள். அன்று முழுவதும் அந்தப் பிரிவை சூபர்வைஸிங் செய்யும் சாக்கில் தன் முழுநேரத்தையும் அங்கு நின்றே கழித்தாள். கூடவே. அந்த பார்மூலாக்கள் அடங்கிய ரகசிய குறிப்பு ஃபைல்களை யாரும் கவனியா வண்ணம் எடுத்து தன் ஹாண்ட் பேக்கினுள் பத்திரமும் படுத்திக்கொண்டாள்.



## 14



அன்று இரவு முழுவதும் நந்தினியால் தூங்கமுடியவில்லை. மனம் முழுவதும் பூரிப்பு எதையோ சாதித்துவிட்ட இனம்புரியா பரவசம்!

கட்டிவில் படுத்திடிருந்தவள் பக்கத்து மேஜையில் பத்திரமாய் வைத்திருந்த அந்த ரகசிய பார்மூலா குறிப்புகளை தொட்டுத்தொட்டு பார்த்தாள்.

சலவைத் தூளின் கலவைக்கான ரசாயன பார்மூலா! எவ்வளவு பெரிய விஷயம்! மகேந்திரனின் சிங்கக் கோட்டையில் புகுந்து எல்லோரது கண்களிலும் மண்ணைத் தூவி நினைத்தது போல் களவாடி விட்டாளே! யாரும் அவளை சந்தேகப்படவில்லையே!

நினைக்கும் போதே இந்த விஷமக்கார மகேந்திரன் எவ்வளவு முட்டாள்தனமாய் அவளை அவளது நடிப்பை நம்பியிருக்கிறான். ஏமாந்திருக்கிறான் என்பது புரிந்து அடக்க முடியாத புன்னகையொன்றும் அவள் இதழ்களில் உதிர்ந்தது.



இந்த பரமார்த்த குரு சீடர்கள் கதையில்வரும் மட்டி, மிலேச்சன், மூடன் வரிசையில் இனி இந்த மகேந்திரனையும் சேர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் அவ்வளவு பெரிய முட்டாள் ஆகிவிட்டான். ஆகப்போகிறான் அவன்!

ஒருகணம்... அவன் தான் செய்த வேலையை நாளை அவன் உணரும் போது அந்த ஆணவக்கார முகம் எப்படி தவித்து திண்டாடி ஸ்தம்பித்துப் போகும்? என கற்பனை பண்ணிப் பார்த்தாள்.

நினைக்கும் போதே பரவசமாய் இருந்தது அவளுக்கு!

அப்படி தவித்து திகைத்து... ஸ்தம்பிக்ககட்டும். நம் பிசினஸ் சாம்ராஜ்யம் இப்படி நொறுங்கிப்போகிறதே.. என துடிக்கட்டும்.

நம்மை.... நம் குடும்பத்தை கல்யாணம் என்ற பெயரில் எப்படியெல்லாம் நாடகமாடி கடைசியில் ஒரேடியாய் கவிழ்த்து வெளியில் தலைகாட்ட முடியாத அளவிற்கு அல்லவா துடிக்கவைத்தான்?

பழிக்குப் பழி... ரத்தத்திடிற்கு ரத்தம்... இத்தோடு கணக்கைத் தீர்த்துவிடலாம். அவனைப் பழி வாங்கிவிட்ட திருப்தியில் வாழ்க்கை முழுவதும் நிம்மதியாக இருக்கலாம்!

ஆவேசமாய் ஆக்ரோஷமாய் நினைத்து அந்த இரவு நேரத்திலும் தன் முத்துப்பற்கள் கடிபட வெகுண்டுதான் போனாள் அவள்.

மறுநாள் விடியலுக்காக காத்திருந்தவள் அதிகாலையிலேயே துள்ளி எழுந்து விட்டாள். மறுபடியும் அந்த ரசாயன கலவைக் குறிப்பைப ார்த்து ஆராய்ந்தாள். எல்லாம் சரியாக துல்லியமாக இருந்தது.

மகேந்திரனின் கம்பெனிக்கு போட்டிக் கம்பெனியாக முக்கியமாய் விளங்குவது மான் மார்க்க சலவைத்தூள் என்றும் அதன் உரிமையாளராக யோகேந்திரன் என்பவர் இருப்பதையும் கண்டறிந்தாள். அந்த யோகேந்திரனும் மகேந்திரனும் பரம எதிரிகள்! ஒருவரையொருவர் விழுங்க நினைக்கும் பிசினஸ் போட்டியாளர்கள்.

தோழி ஒருவள் மூலம் வாங்கி வைத்திருந்த அந்த யோகேந்திரனின் பர்ஸனல் செல் நம்பரும் அவளிடம் இருந்தது. ஆக... அவள் ஒரு ஃபோன் செய்து அந்த யோகேந்திரனிடம் விஷயத்தைச் சொன்னால் போதும்... அடுத்த நிமிடமே... மகேந்திரன்... மகேந்திரனின் தொழில் சாம்ராஜ்யம் க்ளோஸ் ஆகிவிடும்!

குஷியாய் நினைத்தவள் டயரியைப் புரட்டி அந்த யோகேந்திரனின் செல்நம்பரை எடுத்து வைத்துக்கொண்டாள். டெலிபோன் ரிசிவரை எடுத்து ஆவலாய் அந்த நம்பர்களை அழுத்தப் போனவள் டக்கென நின்றாள்.

அவள் மனதில் பட்டென ஒரு மின்னல் வெட்டியது.

இந்த விஷயத்தை யோகேந்திரனுக்கு சொல்வதற்கு முன் அந்த விஷமக்கார மகேந்திரனிடமே சொல்வோமே? அவனை விஷயம் கேட்டு அப்படியே நடுநடுங்கி துடிதுடிக்க வைக்கலாமே? அவனது அந்த திகைப்பை தடுமாற்றத்தை வெகுவாய் ரஸிக்கலாமே?

நினைக்க நினைக்க அந்தப் பழி வாங்கும் உணர்வே அவளுள் பெரும் பரவசமாக ஓடியது. உற்சாகமானவள் மறுகணம் தாமதிக்காமல் மகேந்திரனின் செல் ஃபோனுக்கே டயல் செய்தாள்.

சொற்ப நொடிகளில் மறுமுனை உயிர் பெற்று, யெஸ்.. மகேன் ஹியர்..! என்ற கம்பீரமான குரல் ஒலித்தது.

ஆணவத்தைப் பார்..! பெரிய மகேனாம்..!

இரு...! உன் வண்டவாளம் இப்போது கப்பலேறப் போகிறது... என கொதித்தவள் அதே ஆவேசத்தோடு, மிஸ்டர் மகேந்திரன், மிஸ்டர் முட்டாள் மகேந்திரன்... என்றாள் குரலை உயர்த்தி அதே ஆக்ரோஷத்துடன்.

அவள் பேச... அவள் பேச்சிற்கு கொஞ்சமும் அதிராமல், யார்.... யார் நந்தினியா? என்றான் மகேந்திரன்.

நந்தினி முகம் வெட்டி தோள்களை சிலுப்பிக்கொண்டாள். யெஸ்... மிஸ்டர் முட்டாள் மகேந்திரன். பேசுவது நந்தினிதான்! இவ்வளவு நாள் உங்களிடம் நாடகமாடி நடித்த உங்களை உங்களைப் போலவே நடித்து உங்களை முட்டாளாக்கிய அதே நந்தினிதான்! படபடவென குரல் உயரச் சொல்லி சிரிக்கப்போனவள் மறுமுனையில் எவ்வித சலனமும் இல்லாது போகவே முதல் முறையாய் திகைத்தாள்.

ஒருவேளை... ஃபோனை வைத்து விட்டானா? இல்லை.. அதிர்ச்சியில்... திகைத்து உறைந்து விட்டானா?

அவள் யோசனையாய், ஹலோ! ஹலோ! என்க...., நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். நீ சொல்ல வந்ததைச் சொல்லு... என்று அதே கம்பீரக் குரலில் சொல்லி அவளை ஒரேடியாய் திடுக்கிட வைத்தான் அவன் மகேந்திரன்.



மகேந்திரன் தொடர்ந்து சொன்ன வார்த்தைகளைக் கேட்ட நந்தினிக்கு தலைசுற்றத்தான் செய்தது.

நந்தினியால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை!

எல்லாம் எனக்குத் தெரியும். நீ அந்த பார்முலாக்களை தாராளமாக அந்த போட்டிக் கம்பெனிகளுக்கு கொடு..! என்றான் தெளிவான உச்சரிப்புடன்.

அவளுக்கு பெரும் அதிர்ச்சி! ஒருவேளை நாம் சொன்னதை சரியாய் புரிந்து கொள்ளாமல் இப்படிப் பேசுகிறானோ? என திகைத்து, நான் சலவைத் தூள் ரகசிய பார்முலாவைச் சொல்கிறேன். புரிகிறதா...? என அவள் கேட்டு முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

எல்லாம் தெளிவாய் புரிந்துதான் பேசுகிறேன். நீ அந்த ரகசிய பார்முலாவை அந்த போட்டிக் கம்பெனிக்கு கொடுத்துவிட்டால் அந்த போட்டிக் கம்பெனிக்கு கொடுத்து விட்டால் அவர்கள் டூப்ளிகேட் சலவைத் தூளை உடனடியாக மார்க்கெட்டில் விட்டு வடுவார்கள். பின் உடனே எனது சலவைத்தூள் விற்பனை ஸ்தம்பித்து, என் தொழில் சாம்ராஜ்யம் ஒரே நாளில் சரிந்துவிடும். அப்படித்தானே?

அவன் விபரமாய் பேசி கேள்வியும் கேட்க அவள் முதல் முறையாய் திணறினாள்.

அ.... அ... ஆ... ஆமாம்... அப்படித்தான்...!

அதுதானே... நீ... விரும்பியது? உன் ஆசை?

இம்முறை நந்தினி பதில் சொல்லமுடியாமல் மிடறுவிழுங்கினாள்.

பதில் சொல்.. உன் ஆசை அதுதானே?

அவன் குரலை உயர்த்தடிதினான்.

அவள் குரல் கம்பினாள்.

ம்ம்...! என்று அவள் லேசான முணங்கலாய் சொல்வதற்குள், தாராளமாக உன் ஆசையை நிறைவேற்றிக்கொள்... என்றான் அவன் குரலில் எவ்வித உணர்ச்சியுமில்லாமல்.

நந்தினிக்கு திகைப்பு கூடியது. என்ன உளர்கிறான் இவன்? அவள் சொல்வதைக் கேட்டு கோபம் ஆவேசம், ஆக்ரோஷம் என அத்தனை

உணர்ச்சிகளும் பொங்க தாம தீம் என குதிப்பான் என்று பார்த்தால்... இப்படிச் சொல்கிறானே?

ஒருவேறு நம் திட்டத்தை முறியடிக்க வேறு எதுவும் பிளான் வைத்திருப்பானோ? மறுபடியும் கர்ஜனையாய் அவன் குரல் ஒலித்தது.

ரொம்பவும் குழம்பாதே...! நான் செய்த பாவத்திற்கான பிராயசித்தம்! அதனால்தான் உனது உறவாடிகெடுத்த துரோகத்தை நீ பார்மூலாவை திருடியதைக் கூட தெரிந்தே அனுமதித்தேன்....

அவனது ஒவ்வொரு வார்த்தையும் மின்னல் வெட்டியது போல் இடியாய்த்தான் அவள் தலையில் இறங்கியது எனச்சொல்லலாம்.

கடவுளே! என்ன இது...? பாவமாம்..! பிராயச்சித்தமாம்...! அவள் களவாடபோவது கூட தெரியுமாம்...! தெரிந்தேதான் அனுமதித்தானாம்!

மிஸ்டர், என்ன உளறுகிறீர்கள்? என்றாள் அவளும் கோபமாய் அடிபட்ட பாம்பின் சீறலுடன்

அவன் ஓரிரு நிமிடம் பேசாமல் மௌனித்தான்.

பின் சட்டென, இதையெல்லாம் ஃபோனில் விளக்கிக்கொண்டிருந்தால்... புரியாது... உனக்கு தைரியமிருந்தால்... நேரில்... வா...! விவரமாய்ச் சொல்கிறேன்...! சொல்லியவன் அவள் பதிலுக்கு காத்திராமல் டொக்கெ ஃபோனை வைத்து விட்டான்.

திகைத்துப் போனாள் நந்தினி.




நந்தினிக்கு அவன் முகத்தில் விழிக்க கொஞ்சமும் இஷ்டமில்லைதான்! நினைத்தபடி பழி வாங்கியாகிவிட்டது. இனி என்ன அவன் முகத்தைப் பார்ப்பது? என்றுதான் இருக்க நினைத்தாள்.

ஆனாலும், தைரியமிருந்தால் நேரில் வா..! என அவன் சொன்னது அவளை ஆத்திடிரப்படுத்திருந்தது.



அவளுக்கென்ன பயம்? அவன்செய்த விஷமமான காரியத்திற்கு அவனைப் போலவே விஷமமாய் நடந்து பதிலடி கொடுத்திருக்கிறாள்! இதில் பயத்திற்கோ ஓடி ஒளிவதற்கோ அவசியமில்லை?

அடுத்து ஐந்து நிமிடங்களில் விருட்டென கிளம்பி விட்டாள் அவள். நேராய் அலுவலகம் சென்று துணிச்சலுடன் அவன் அறைக் கதவைத் திறந்தாள்.

எதையோ வென்று சாதித்து விட்ட உணர்வுடன் அவன் முன் எவ்வித பயமில்லாமல் நின்று கைகளையும் கட்டிக்கொண்டாள்.

அவன் மோகன மகேந்திரன் முகத்தில் திகைப்பும் ஆச்சரியமும் ஓடத்தான் வைத்தகன் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனை எரிச்சலூட்ட நினைத்தவளாய், என்ன பார்க்கிறீர்கள்? உங்களுக்கு செகரட்டரி வேஷம் போட்டதெலலாம் நடிப்பு மிஸ்டர்? இப்போத புரிந்ததா.... இந்த நந்தினி யாரென்று தெரிந்ததா? என்றாள் குரலை உயர்த்தியவாறு.

அவன் அவள் பேச்சிற்கு அதிரவில்லை. அதிராமல் சிரிக்கவும் செய்தான்.

நான் சொன்னது உனக்கு இன்னும் புரியவில்லையா? நீ இப்படி நடிக்க வந்தது எனக்கு முன்பே தெரியும்...! என்றான் அவனும் உயர்ந்த குரலோடு.

தெரியுமா? எப்படி? எப்படி?

அவள் பரபரத்தாள்....

அவன் கைகளை உயர்த்தினான்.

என் முகத்தை நன்றாகப் பார்...! என்னைப் பார்த்தால்... உனக்கு நீ சொன்னதை எல்லாம் நம்பும் இளிச்சவாயனாகவா தெரிகிறது? எனது பிசினஸ் உலகில் எத்தனை பேரை எத்தனை விதமான நடிப்புகளை பார்த்திருப்பேன்? நீ கண்ணைக் கசக்கி கொண்டு வந்தால்... உடனே நம்பி... வேலையை தூக்கி கொடுத்துவிடுவேன். அதுதானே உனது கணிப்பு?

அவன் நிறுத்த அவள் பெரிதாய் தலையசைத்தாள்

அப்படித்தானே நடந்து கொண்டீர்கள்?

அவன் பதிலுக்கு அருவையாய் முகம் வெட்டினான்.

அது நடிப்பு! உன்னைப் போல் நானும் நடித்தேன். நம்பியது போல் வேலையும் கொடுத்தேன்... எல்லாம் எதற்கு... எதற்கு தெரியுமா?

அவன் நிறுத்த அவள் மீண்டும் பரபரத்தாள்.

எதற்கு? எதற்கு?

ம்ம்... சொல்கிறேன்! உன்னை கல்யாணம் செய்வது போல் வந்து இன்விடேஷன் வரை அடித்தது. கடைசியில் அவப்பெயர் உண்டாக்கி திருமணத்தை நிறுத்தறியது. நான் செய்த எல்லாம் உனக்கும் உன் குடும்பத்திடிற்கும் மிகப்பெரிய பழியை உண்டாக்கி விட்டது என்பதை உணர்ந்தேன். அது பாவமான ஒரு செயல் என்பது அதற்குப் பின்தான் உரைத்து என் மனதில் பட்டது... அந்த நேரத்தில்தான் நீயே என்னிடம் வந்து வேலை கேட்டாய்.. உன்னிடம் உன் கண்களில் அந்தப் பழி வாங்கும் வெறி இருப்பது தெரிந்தே உன்னை வேலைசெய்ய அனுமதித்தேன். உன்னையும் ரகசியமாய் கவனித்தேன். நான் நினைத்த மாதிரியே நீ அந்த ரகசிய பார்முலாவை களவாட முயற்சி செய்தாய். சரி உன் திருப்திக்டகாக உன் வெறி அடங்;க... நீ அதைச் செய்யட்டும் என்று சும்மா இருந்துவிட்டேன்...!

அவன் தனது நீண்ட உரையை முடித்ததும் அவளுள் ஆச்சரியம் அடங்கவில்லை.

இன்னும் அந்த பார்மூலாக்களை நான் கொடுக்கவில்லை. இனிதான் உங்கள் போட்டிக் கம்பெனிக்கு அதை கொடுக்கப் போகிறேன்....

அவள் பேச்சை முடிக்கும்முன் அவன் கைகளை விரித்தான்.

தாராளமாக கொடு....! நான்தான் முன்பே உன்னிடம் ஃபோனில் சொல்லிவிட்டேனே...?

அதனால் உங்களுக்கு பாதிப்பு ஏற்படாதா?

அவளுள் திடுமென அந்த சந்தேகம்! கண்கள் விரிய அதையே கேட்டாள்.

அவன் மறுபடி சிரித்தான்.

ஏன் ஏற்படாது? கண்டிப்பாய் ஏற்படும் நீ நினைத்தது போலவே டூப்ளிகேட் சலவைத்தூள்கள் மார்க்கெட்டிலட் நுழைந்து என்பிராண்டுகளை ஸ்தம்பிக்க வைத்துவிடும். நீ ஆசைப்பட்டது போலவே என் தொழில் சாம்ராஜ்யம் ஒரே வாரத்தில் சரிந்து விடும்..! உனக்கு திருப்திதானே?

சொல்லியபடி அவன் மீண்டும் சிரிக்க அவள் இம்முறை திகைத்தாள்.

எல்லாம் தெரிந்தும் சொல்கிறீர்களா?

ஏன்.. திடீரென... மூளை... எதுவும் பிசகி... உங்களுக்கு...?



அவன் வார்த்தைகளை முடிக்கவில்லை. அவன் குரல் கம்பீரமாய் கர்ஜனையாய் எதிரொலித்தது. மூளை ஒன்றும் பிசகவில்லை. நான் முன்பு சொன்னது போல் பிராயசித்தம்! தெரிந்தே நான் செய்த பாவம் ஒன்றின்கான பிராயசித்தம்.. ! என்றபடி வீட்டை விட்டு மகேந்திரன் எழுந்து கொண்டான்.

நிதானமாய் அவள் பக்கம் நடந்து வந்தான். ஒரு சில நிமிடங்கள் அமைதியாக நீள மூச்சிழுப்பிற்குப் பின் பேச ஆரம்பித்தான்.

நந்தினி, எதோ ஒரு வேகத்தில் உன்னிடம் நடித்து கல்யாணம் வரை வந்து அப்படி நறுத்தி பழியும் வாங்கிவிட்டேன். ஆனால் அப்படி பழி வாங்கி உங்கள் குடும்பத்திற்கு பெரும் தலைகுனிவையும் பாதிப்பையும் ஏற்படுத்தியதும் தான் எனக்கு உண்மை புரிந்து உரைத்தது. அதாவது எனது சகோதர்ன தானாக விரக்தியில் எடுத்துக்கொண்ட முடிவிற்கு உங்கள் குடும்பத்தை குற்றம் சாற்றுவது எப்படி முறையாகும்? என்ற கேள்வி எழுந்து என்னை பெரிதும் இம்சித்தது. முன்பின் யோசிக்காமல் இப்படி ஒரு பாவச்செயல் செய்து விட்டேனே என துடித்தேன். எப்படி இந்த பாவத்தைப் போக்குவது விமோசனம் பெறுவது... என நான் யோசிக்கையில் நீ என்னிடமே வேலை கேட்டு வந்தாய். உடனே நானும் எதையும் வெளிக்காட்டாமல் உன்னிடம் திமிராக இருப்பது போலவே நடந்து நடித்து வேலை கொடுத்தேன் இது தான் நடந்தது. இப்போது புரிகிறதா?

அவன் நிறுத்திவிட்டு மீண்டும் அவள் பக்கம் வந்து நெருக்கமாய் நின்றான். நன் இமைகள் விரிய உற்றுப் பார்த்டதான்.

நான் அப்படி மாறிய பின் புதியதாய் எனக்கு இன்னொரு காரணமும் வந்து ஒட்டிக்கொண்டது.... அது உனக்குத் தெரியுமா?

அவன் பீடிகையாய் நிறுத்தினான். அவள் கண்களில் புதியதாய் குறும்பொன்று மின்னியது அவளை வியப்பாக்கியது இன்னொரு காரணமா?

அவள் திகைத்து கேட்க அவன் லேசான சிரிப்புடன் இன்னும் அவள் பக்கம் நெருங்கினான். மேலும் மேலும் நெருங்கினான்.

என்ன... இது...? என அவள் மெல்ல பின் வாங்கி விலகப்போக... சட்டென விடாமல்தாவி அப்படியே இறுக அணைத்தான் அவன்..!

திகைத்தவளின் காதுகளில், உன் மீது நிஜமாக திடீரென முளைத்த காதல்! அது தான் நான் சொல்லப்டே "கும் இன்னொரு காரணம்.! என்று முணுமுணுக்கவும் செய்தான் மகேந்திரன்.



# 16



அங்கிருந்த ஏறக்குறைய, தப்பித்தோம்... பிழைத்தோம்... என ஓடியேதான் வந்து விட்டாள் நந்தினி.

அவன் மகேந்திரன் இப்படியெல்லாம் செய்வான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள் பழி வாங்க துடித்த ஜென்மவிரோதி அவன்! அவளை இன்விடேஷன் அடித்து கல்யாணம் வரை வந்து, அவள் நடத்தையை கலங்கப்படுத்தி நிறுத்தியவன், வெளியே தலைகாட்ட முடியாத அளவுக்கு அசிங்கப்படுத்டியவன்... அவன் வந்து திடீரென உருகுகிறான் கட்டியணைக்கிறான். அவளை விரும்புவதாய் காதல் வசனம் பேசுகிறான். என்ன ஒரு பைத்தியக்காரத்தனம்!

எவ்வளவு தைரியமிருந்தால் அவளை கட்டிப்பிடித்து... ஓரிரு நிமிடங்கள் அந்த நிலை நீடித்ததே! அவளும் மதியிழந்து, குமுட்டைபோல் செய்வதறியாமல் அந்த நிமிடங்களில் விழிக்கத்தானே செய்தாள்?

டக்கென அவன் கைகளை தட்டி செவிட்டில் பொறிபறக்க ஒரு அறை விட்டிருக்கலாம். அவள் செய்யவில்லை. அவளால் செய்ய முடியவில்லை. திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் உண்மையிலே குமுட்டையாய் மூளை குழம்பிவிட்டது என்றே நினைத்தாள்.

ஆனால் அதற்குப்பின் விறுவிறுவென சுதாரித்து அவன் பிடிகளை உதறி, விடுங்கள்...! காதலாவது... மண்ணாங்கட்டியாவது...! என கத்தியபடி வெளியேறி அங்கிருந்து ஓடியும் வந்து விட்டாள்.

அன்று மட்டுமல்ல. அந்த திகைப்பான அதிர்ச்சியை ஜீரணிக்க அவளுக்கு இரண்டு, மூன்று நாட்கள் ஆயிற்று. ஏனெனில் திரும்பத்திரும்ப அவன் கட்டியணைத்ததும்.. அவள் பேசாமல் ஓரிரு நிமிடங்கள் அதை அனுமதித்ததும் மனதில் தோன்றி அவளை வாட்டியெடுத்தது.

நான்காம் நாள்தான் அவள் ஓரளவு சகஜ நிலைமைக்குத் திரும்பியிருந்தாள். அன்றும் காலையில் எழுந்தவள் அடிபட்ட புலி போல்தான் ரூமின் குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். கோபமாய் சிந்தித்தாள்.



அந்த சலவைத் தாள் ரகசிய பார்மூ

லா ஃபைல் வேறு அவள் மேஜையில் தூங்கிக்கொண்டிருப்பது அவள் கண்களில் பட்டது.

அதைக்கொண்டுபோய் போட்டிக்கம்பெனி ஆட்களிடம் கொடுக்கலாம்தான்! ஆனால் மகேந்திரன்தான்... தாராளமாய் கொடு... என் பரவம் போகட்டும்...! பிராயசித்தம் தேடிக்கொள்கிறேன் என்கிறானே...! திமிர், ஆணவம் எல்லாவற்றையும் விட்டு விட்டு சரணாகதி அடைந்தவனை எப்படி... இனி அடிப்பது? அது செத்த பாம்பை அடிப்பது போல்தானே ஆகிவிடும்?

என்ன செய்வது? என மேலும் இரண்டு மூன்று நாட்கள் யோசித்தாள்.

ஒன்றும் பிடிபடவில்லை. எரிச்சல்தான் மிகுந்தது. தினமும் வீட்டில் வேலைக்குப் போகிறேன் எனக்களம்பி பழைய கல்லூரி தோழிகளை எல்லாம் தேடி அரட்டை செய்து நேரத்தைப் போக்கினாள். எப்படியும் இரண்டு மூன்று நாட்களில் அந்த தோழிகள் மூலம் புது வேலையும் கிடைத்து விடும் என்ற தைரியமும் இருந்தது.

நான்காம் நாள் அப்படி அவள் காலையில் ஹாண்ட் பேக்குடன் வழக்கம்போல் கிளம்ப... அவளை எதிர் கொண்டனர் தந்தை சிவராமனும் தாய் பூரணியும்.

கண்மணி இன்று உன் புரோகிராம்களை எல்லாம் கான்சல் செய்து விடு. இன்று ஒருநாள் மட்டும் எங்களுடன் நீ வர வேண்டும்... என்றார் தந்தை சிவராமன் கெஞ்சும் குரலில்.

புரியாமல் விழித்தவள், எங்கு? எதற்கு? என திகைக்கத்தான் செய்தாள்.

பதில் சொல்லாமல் புன்னகைக்கத்தான் செய்தார் சிவராமன்.

அதை நான் சொல்வதை விட... நீ நேரில் வந்து பார்த்தால்தான் சுவாரஸ்யமாய் இருக்கும்... என்று சொல்ல... புதிராய் தலையாட்டியபடி அவர்களுடன் கிளம்பி விட்டாள் நந்தினி

அவர்கள் கிளம்பும் சமயமாய் பார்த்து அக்கா நளினா தன் கணவரோடு வந்து விட எல்லோருமாய் வடகைக்கார் பிடித்து கிளம்பிவிட்டார்கள்.

நந்தினிக்குத்தான் ஆச்சரியம் தாங்கவில்லை! திடீரென எங்கே? எதற்காக குடும்பத்துடன் சேர்ந்தாற் போல்...? சொல்லுங்கள்..! ஐயோ... சொல்லுங்கள்....! என அவள் பரபரத்த போதும் யாரும் பதிடில் சொல்லவில்லை. கொஞ்சம் பதட்டப்படாமல் பொறுமையாக இரு கண்மணி! இன்னும் சிறிது நேரத்தில் உனக்கு எல்லாம் புரிந்து விடும்! என தந்தைதான் கெஞ்சலாய் அடிக்கடி சமாதானப்படுத்தினார். சரி என்னதான் என்று பார்ப்போம்... என பொறுமை காத்தாள் நந்தினி.

அடுத்த அரை மணி நேரத்திடில் கார் நின்றது.

நின்ற இடம்... நகரின் கல்யாண பதிவு செய்யும் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்!

அங்கு கோட்டும் சூட்டுமான மாப்பிள்ளை கோலத்தில், கையில் மாலையுடன் தயாராய் மோகன மகேந்திரன்!



## 17



நந்தினிக்கு ஆயிரம் வோல்ட் பத்தாயிரம் வோல்ட் மின் இணைப்பைத் தொட்டது போல அதிர்ச்சிதான்!

விஷயம் மெல்ல மெல்ல அவள் காதுகளில் சொல்லப்பட... கொதித்து கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டாள் அவள்.

அன்று மோக மகேந்திரனுக்கும் அவளுக்கும் பதிவுத் திருமணமாம்! மோகன மகேந்திரன் திருந்திவிட்டானாம். நடந்த செயல்களுக்கு எல்லாம் அவள் தந்தையிடம் குடும்பத்திடம் மனமுருக பேசி மன்னிப்பும் கேட:டு விட்டானாம். தன்னால் ஏற்பட்ட களங்கத்தை தன்னால்தான் நீக்கமுடியும் என்றுதான் இந்த பதிவுதிருமண ஏற்பாடாம்...!



கேட்ட நந்தினி காதுகளை பொத்திக்கொண்டாள்.

அவராவது... திருந்துவதாவது? மறுபடியும் ஒரு நடிப்புதான்...! உங்களை எல்லாம் ஏமாற்றப்பார்க்கிறார்...! என ஆவேசமாய் கூச்சலிட்டாள். குதித்தாள். எரிமலையாகவே ஆகிவிட்டாள். அவள் தோள்களை ஆதரவாய் பற்றி தட்டியபடி தந்தை சிவராமன், முதலில் கோபத்தை குறைத்து சாந்தம் கொள் கண்மணி. நிறைய விஷயங்கள் நடந்திருக்கிறது. உனக்கு அதைபற்றி எல்லாம் தெரியாது. அவை பற்றி முதலில் தெரிந்துகொள். அப்போதுதான் எல்லாவற்றையும் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்...

நந்தினி முகம் வெட்டினாள். அப்படி என்ன விஷயங்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள் பார்ப்போம்...! என்றாள்.

சிவராமன் விவரிக்க ஆரம்பித்தார்.

கண்மணி, கல்யாணம் நின்று நாம் பெரும் அவமானத்திற்கு உள்ளான போதுதான் மிஸ்டர் மகேந்திரனுக்கு தான் எவ்வளவு பெரிய தப்பைச் செய்திருக்கிறோம் என்பது உரைத்து புரிந்திருக்கிறது. அடாடா ஒரு குடும்பத்திற்கே தீங்கிழைத்து விட்டோமே.. எனத் துடித்து என்னைத் தேடி வந்து விட்டார். என்னைத் தனியே சந்தித்து மனப்பூர்வமான மன்னிப்பைக் கேட்க... நானும் அவரிடம் அவருடைய சகோதரர் தற்கொலைக்கு நாங்கள் காரணமல்ல... அவருடைய விரக்தியான மன நிலையே... என்பதை விளக்கினேன். அவரும் உடனே தனது தவறை புரிந்து கொண்டார். தன்னால் ஏற்பட்ட களங்கத்தை துடைக்க உன்னை உடனே பதிவுத்திடிருமணம் செய்யவும் தயாராய் இருப்பதாய் கூறினார். அந்நேரம் பார்த்துதான் நீ பழிவாங்கும் கோபத்திடில் அவரிடமே சென்று அவர் கம்பெனியிலேயே வேலைக்குச் சேர்ந்தாய். உடனேதான் மகேந்திரன் என்னிடம், நந்தினிக்கு என்மீது உள்ள ஆத்திரம் தீரட்டும், அது வரை நாம் பொறுமை காப்போம்... என்று சொல்ல எனக்கும் அது சரியெனப் பட்டது. அதனாலே நானும் சம்மதித்தேன். நாங்கள் எல்லோரும் நீ அந்த பார்முலா ஃபைலை திருடி உன் பழிவாங்கும் திருவிளையாடலை முடித்துக் கொள்ளவேண்டும் என பார்வையாளர்கள் போல் காத்திருந்தோம். இதோ... எங்கள் நினைப்பு வீண்போகவில்லை. இன்று உண்மையிலேயே.... எல்லாம் முடிந்து.... நீ நினைத்த மாதிரியே செய்துவிட்டாய்... அதனாலே... இனியும காலம் தாழ்த்துவது தவறு என நான் முடிவெடுத்து மகேந்திரனிடம் பேசி உடனே பதிவுத் திருமண ஏற்பாடுகளை செய்டு விட்டேன்.... என்ன சரிதானா?

நீளமான உரையை ஒரே மூச்சில் சொல்லி முடித்தார் தந்தை சிவராமன்.

நந்தினிக்கு நடந்திருப்பதையே உணர்கையில் தலையே சுழன்று எல்லாவற்றையும் மறைத்து என்னவெல்லாம் செய்து விட்டார்கள்? கடைசியில் நிஜமானகவே இந்த ஒன்றும் புரியாத குமுட்டை நாம்தானா? நந்தினிதானா?

அவளுக்கு எரிச்சல், கோபம் வேகம், அவமானம் என அத்தனை உணர்ச்சிகளும் மாறி மாறி வந்தது. என்ன செய்ய எதை பிரதிபலிக்க என்று புரியாமல் திணறத்தான் செய்தாள். அக்கா நளினா ஓடிவந்து அவள் தோளைப்பிடித்து ஆறுதலாய் அணைத்துப் பிடித்தவள், நீ ஒன்றும் குழம்ப வேண்டாம் நந்து. நடப்பது எல்லாம் உன் நன்மைக்குத்தான். நீ ஒன்றும் பேசாமல் சம்மதமாய் உன் தலையை மட்டும் ஆட்டு! என்றாள்.

என்ன தலையை ஆட்டுவதா? அதற்காக... அதற்காக... இந்த மகேந்திரனைக் கட்டிக்கொள்ள சம்மதித்து விடுவதா?

அவளை மேலும் யோசிக்க விடாதபடி தாயும், தந்தையும் கைகூப்பினர். இதோ பாரம்மா நந்தினி, ஒரு விஷயத்தை நன்றாக யோசித்துப் பார். உனக்கும், நம் குடும்பத்திற்கும் ஏற்பட்ட அவமானமும் தலைகுனிவும் இது ஒன்று நடந்தால்தான் அகலும். அகற்றவும் முடியும். மேலும் மகேந்திரன் நிஜமாகவே தனது தவறை உணர்ந்து இப்போத திருந்தி விட்டார். உன் கோபத்தை விட்டுவிட்டு அவரை ஏற்றுக்கொள்வதுதான் முறை... எங்களுக்காக நீ இதை செய்துதான் ஆக வேண்டும்..!

கெஞ்சாத குறையாய் கை கூப்பினர் இருவரும்.

பெற்றவர்கள் இப்படி உருகும்போது அவளால் என்ன செய்யமுடியும்? அவளையறியாமல் அவளது தலை சம்மதத்திற்கான அறிகுறியைக் காட்டி ஆடியது. மாலை மாற்றி அவளை பதிவுத் திருமணம் செய்தான் மகேந்திரன்

.............................



அன்று முழுவதும் முகத்தை குனியவே வைத்திருந்தவள் இரவு தனியே மகேந்திரன் ரூமிற்குள் அவளைத் தள்ளியபோதுதான் முகத்தை நிமிர்த்தினாள்.

உள்ளே நுழைந்து அவனை எரித்து விடுவதுபோல் பார்த்தாள். கண்கள் விரிய அவன் உறுத்து வெறுத்துப்பார்த்தது எல்லாம் ஒரிரு நிமிடம்தான். சட்டென அவன் அவளை இழுத்து கரங்களால் வளைத்து பூக்குவியல் அணைப்பு ஒன்று செய்தபோது.... அடடா... இந்தக் கோபமெல்லாம் எங்கேதான் போயிற்று? என தன்னைத்தானே அவள் கேட்க வேண்டியதாயிற்று.

திகைத்து சிவந்தவளின் கன்னங்களில் மென்மையாய் இதழ்களைப் பதித்தான் அவன். என்ன பார்க்கிறாய் கண்மணி? வெறுப்பு கோபம் எல்லாம் வெளியில்தான். நம் இருவருக்கும் உள்ளே ஆத்மார்த்தமாய் இருப்பது அன்பு...! அளவு கடந்த பாசம்...! அதைப்புரிந்து கொள்...! என்றவுடன், நீயே பார்! உன்னைவிட உன் உணர்வுகளைப்பற்றி நான்தான் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறேன். நீ கவனித்தாயா... கோபக்கனலாய் தகதகத்துக்கொண்டிருந்த நீ நான் தொட்டு அணைத்ததும் குளிர்ந்துவிட்டாய் தானே? எனக்கூறு... அவன் அணைப்பில் இருந்து விடுபடுவது போல் திமிறினாள்.

ம்கூம்...! இனி... பிடியை.... இந்த அணைப்பை விடுகிற எண்ணம் இல்லை. உண்மை முழுவதையும் சொல்லிவிட்டுத்தான் விடுவேன்.. என்றான் அவன் பிடிவாதமாய்.

எந்த உண்மை? சீக்கிரமாகச் சொல்லுங்கள்...! என்றாள் அவள் அவசரப்படுபவள் போல்.

ம்ம்.. சொல்கிறேன்... ஆனால் நிதானமாக... என்றபடி அவன் விளக்க ஆரம்பித்தான்.

நந்து கண்மணி, முதலில் ஒரு விஷயத்தை தெரிந்து கொள். நாம் இருவருமே நல்லவர்கள் அதனால்தான் நம்மால் எந்த ஒரு கெட்ட விஷயத்தையும முழுமையாய் பண்ண முடியவில்லை....

அவன் சொல்ல, நீங்கள் சொல்வது புரியவில்லை... என்றாள் குரலை உயர்த்தி

அவன் புருவம் உயர்த்தி தலையைச் சிலுப்பிக்கொண்டான். நீயே பார், இந்தப் பழி வாங்கும் வேலையைக் கூட நாம் இருவரும் ஒழுங்காய் செய்ய முடியவில்லை. நான் பழிவாங்க நினைத்து கல்யாணத்திதை நிறுத்தி உங்கள் குடும்பம் பெரிய தலைகுனிவிற்கு போனதுமே மனம் மாறிவிட்டேன். அதே போல் நீயும் ஆவேசமாக அந்த பார்மூலா ரகசியங்களை திருடினாய். பின் போட்டிக் கம்பெனிக்கு கொடுக்க மனமில்லாமல் நிறுத்தி விட்டாய். என்ன நான் சொல்வது உண்மைத்தானே?

அவள் தலையை மட்டும் மெல்ல அசைத்தாள். ஆமோதித்தாள். அவன் தொடர்ந்தான்.

அதிலும்... நீ வேலை கேட்டு என்னிடமே வந்து நின்றாய் பார்.... அப்போதுதான் என்னுடைய இதயம் அப்படியே பல்டி அடித்தது. உன்னை நிஜமாகவே விரும்ப ஆரம்பித்தது....

ஒஹோ.....

அவள் அசட்டையாய் தோள்களை குலுக்கினாள்.

பின் நீ என்னைப் பழி வாங்க வேலைக்கு வந்திருப்பதையறிந்து மிகவும் குஷியானேன். எனது தவறுக்கு பிராயசித்தம் போல் ஆயிற்று. உன்னிடம் பழகியது போல் ஆயிற்று!... என அதை அனுமதித்தேன்... உன் ஆத்திரம் தீரும்வரை காத்திருந்தேன். ஆனால்.... என மறுபடி நிறுத்தியவன், உன் ஆத்திரம் லேசில் தணிகிற மாதிரி தெரியவில்லையே... என்றான் அதைியாக.

அவள் உடம்பு முழுவதையும் குலுக்கினாள். ம்ஹூம்! ஒரு போதும் தனியாது... தீராது...! என்றாள் நந்தினி ஆவேசமாய்.

அவன் மெல்ல சிரிக்க ஆரம்பித்தான்.

என்ன சிரிக்கிறீர்கள்?

வேறு ஒன்றுமில்லை.... எனது முந்தைய செய்கைகளுக்காக இவ்வளவு ஆத்திரப்படுகிறாயே... நீ... என் அலுவலகததில் வந்து செய்தது மட்டும் என்னவாம்? அதற்கு என்ன பெயர்? அதுவும பயங்கர சதிதானே?



என அவன் வினவ... அவனது கேள்வி அவளுக்கு பொட்டிலடித்த மாதிரி இருந்தது.

அவன் சொல்வது நிஜம்தானே?

அவன் செய்வதற்கு பதிலாய் அவளும் அதே போல் தரக் குறைவாயன் இறங்கித்தானே சதி செய்ய திட்டமிட்டிருந்தாள்? என்னதான் பழிக்குப்பழி என சமாதானம் சொன்னாலும் அவளது செய்கை எந்த விதத்திலும் நியாயமில்லாததுதானே!

நான் செய்தது தவறுதான். என்னை மன்னித்துவிடுங்கள்!

முதல் முறையாய் உண்மையை உணர்ந்த குற்ற உணர்வுடன் அவள் சொல்லிதனது அழகான தலையை குனிய வைத்தாள். அதைப் பொறுக்காத மகேந்திரன், அதற்காக ரொம்பவும் ம்ருக வேண்டாம் கண்மணி தப்பு ப்ளஸ் தப்பு சரியாயிற்று...! என்ன நான் போடும் கணக்கு சரிதானே...? என்றபடி கண் சிமிட்டினான்.

நிமிர்ந்து பார்த்தவள் அவளது ஆர்வமான முகக்குறிப்பை கண்சிமிட்டலைப் பார்த்து தன்னையறியாமல் சிரித்து விட்டாள்.

அவள் முதல் முறையாய் இறுக்கம் தளர்ந்து சிரிப்பதைப் பார்த்த மகேந்திரனும் உற்சாகமாகி விட்டான். அடாடா! அம்மணி சிரித்து விட்டார்கள்... இனிக் கவலையில்லை மெல்ல இந்தப் புன்னகை வழியாய் அப்படியே அ;மணி நெஞ்சத்தில் நுழைந்துவிடலாம் இதயத்தில் இடம் பிடித்து விடலாம்...

மறுபடியும் அவன் ஆர்வமான முகத்தை உற்றுக் கவனித்து,இவ்வளவு அன்பு நம்மீது கொண்டிருக்கிறானா...? என வியந்தவள் அதை கொஞ்சமும் வெளிக்காட்டாமல், அப்படி நெஞ்சத்தில் இடம் பிடிப்பது போலியான உதட்டுச்சுழிப்புடன்.

மகேந்திரனும் விடவில்லை.

எளிதல்லதான்...! ஆனால்... அதற்கும் வேறு சில அவசர தடாலடி வழிகள் இருக்கின்றன.... தெரியுமா...?

அப்படியா? அவைகள் என்னவோ?

கேட்டபடி அவள் தனது மருண்டமான்விழிகளை விரித்து அதிசயமாய் அவனைப் பார்க்க... அந்த விழிகளின் அழகை ஆசைதீர உற்றுப் பார்த்து விட்டு மீண்டும் கண்ணடித்தான் மகேந்திரன்.

அந்த வழிகளை.. சொல்லிப் புரிய வைக்க முடியாது. செய்ததான் காட்ட வேண்டும். பார்க்கிறாயா? என்றபடி வேகமாய் அவளை தன்னோடு இறுக்கி தனது இதழ்களை அவளது இதழ்களோடு ஆவேசமாய் பொருத்த முயன்றான்.

அதை வெட்கம் கவ்விய சிவந்த முகத்துடன் சந்தோஷமாய் எதிர்கொள்ள ஆரம்பித்தாள் அவளது அன்பு மனைவி நந்தினி!

முற்றும்




**அக்ஷயா** மாத நாவல்

மலர் : 1 இதழ் : 8

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035.